ISSN 1391-9504

# விஜய்

Vijey විජය

10.08.2016 - மலர் 13, இதழ் 24




## கொழும்பு மாவட்ட சாரணர் கெம்போரி

## இலங்கையில் யானைக்கால் நோய் இனி பரவாது


## விடுமுறைக் காலமிது....

விலை ரூபா 15/-

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்குள்ள பழங்களுக்குப் பொருத்தமான கட்டங்களை வெட்டி ஒட்டுங்கள்





1. படத்தில் காணப்படும் பிராணி எது? ..............................
(நாய்/ பூனை/ முயல்)

2. சிறு பையன் ..........................
(விளையாடுகின்றான்/ துடைக்கின்றான்/ படிக்கின்றான்)

3. இங்குள்ள தரைவிரிப்பின் நிறம் ...................................
(நீலம்/ சிவப்பு/ பச்சை)

4. அழகிய பூக்கள் ............................ உள்ளன.
(பூச்சாடியில்/ தோட்டத்தில்/ மரத்தில்)





படங்களை உற்றுப் பார்த்து படங்களுக்குப் பொருத்தமான வசனத்திற்குரிய இலக்கங்களை கோடிட்ட இடத்தில் குறிப்பிடுக.



1. 'ஓடு' இதற்கு கவசமாகும்.
2. தொடர்ந்து அழுகிறாள்.
3. வீரர்கள் வெற்றிக்காக போரிடுகின்றனர்.
4. அட கடவுளே...! இவரால் இந்த பாரத்தை தூக்க முடியாது.
5. இது முட்டை இடும்...
6. பாவம்! இவனுக்கு தலையில் அடிபட்டுவிட்டது.

படங்களுக்குப் பொருத்தமான ஆங்கில சொற்களை கோடிட்டு பொருத்திக் காட்டுங்கள்.



Socks
Jumper
Skirt
Trousers
Shorts
T-shirt
Hat
Shoes
Shirt



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய்
Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி
கொழும்பு -02
தொலைபேசி 2479653
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652

# சிறுவர்களாலும் சமூகத்திற்கு சேவையாற்ற முடியும்





இன்றைய காலத்தில் பாடசாலை செல்லும் சிறுவர்களும் ஏனையவர்கள் போன்று மிகவும் வேலைப் பளு மிக்க வாழ்க்கையையே வாழ்கின்றனர். சிறுவர்கள் தமது இளம் பருவத்திற்கேயுரிய இயல்புகளை இழந்து, போட்டித்தன்மை மிக்க ஒரு வாழ்க்கை முறையை வாழ்ந்து வருகின்றமையானது, கவலைக்குரிய விடயமாகும். எனினும், இவ்வாறான சூழலில்கூட சிறுவர்கள் ஒன்றிணைந்து தம்மால் இயன்ற சேவைகளை சமூகத்திற்கு ஆற்றி வருகின்றமை சிறப்பான செயல் என்றே கூற வேண்டும். இது பாராட்டுதற்குரியதுமாகும். பொது நோக்கத்திற்காக இவ்வாறு ஒன்றிணைந்து செயற்படுவது சிறந்த நற்செயலாகவே அடையாளப் படுத்தப்படுகின்றது.

சமூக நலன் கருதி செயற்படுபவர்கள் தனியாக செயல்படுவதைவிட, குழுக்களை அமைத்து செயற்படுவதன் மூலம் சமூகத்திற்கு ஏராளமான நன்மைகளை செய்ய முடியும். சிறுவர் குழுவொன்றில் இணைந்து சமூகநல செயற்பாடுகளில் பங்குபற்றுவதன் மூலம், பாடசாலைக் காலத்திலிருந்தே பல நன்மைகளை அடைய முடியும். ஒன்றிணைவதன்மூலம் செயற்பாடுகளை இனங்காணுதல், பிரச்சினைகளை எதிர்கொள்ளல், சம வயது பிள்ளைகளுடன் பழக வாய்ப்புக் கிடைத்தல், பொது குறிக்கோளுக்காக இணைந்து செயற்படும் முறை பற்றி கற்றுக்கொள்ளல், பொது நலன் குறித்தும் சமூக செயற்பாடுகள் குறித்தும் அனுபவங்களைப் பெறுதல், தலைமைத்துவ பண்புகளை வளர்த்துக் கொள்ளல் போன்ற பண்புகளை வளர்த்துக்கொள்ள முடியும். அத்துடன், எதிர்கால வாழ்க்கைக்குத் தேவையான படிப்பினைகளைப் பெற்றுக் கொள்ளவும் முடியும்.

குழுக்களாக இணைந்து சமூக நோக்கில் சேவையாற்றும்போது வேறுபாடுகளைக் களைந்து பணியாற்றுவது அவசியமாகும். பிரதேசத்தின் மத தலங்களை சுத்தம் செய்தல், சிரமதானப் பணிகளில் ஈடுபடுதல், கல்வியில் பின்தங்கியுள்ள மாணவர்களுக்கு உதவுதல், வறிய மாணவர்களுக்கு புத்தகங்கள்- பாடசாலை உபகரணங்களை வழங்குதல், சிறுவர் நூலகத்தினை உருவாக்குதல், வாசிப்புப் பழக்கத்தினை ஊக்குவித்தல், மர நடுகையில் ஈடுபடுதல் போன்ற செயற்பாடுகளை உங்கள் குழுக்களுடாக மேற்கொள்ள முடியும். நீங்கள் அனைவரும் ஒன்றிணைந்து திட்டமிட்டு செய்யும் வேலைகள் உங்களுக்கும் ஏனையவர்களுக்கும் பயனளிக்கும்போது, மனத் திருப்தி ஏற்படும். இதன் மூலம் கிடைக்கும் அனுபவங்கள், உங்களின் எதிர்கால வாழ்க்கைக்கு உதவியாக இருக்கும்.

இன்றைய மாணவர்கள் பொதுவாக பரீட்சையினை நோக்காகக்கொண்டே கல்வி கற்றுக்கொள்கின்றனர். தமக்கு ஓய்வு கிடைக்கும் இதர பொழுதுகளில் தொலைக்காட்சி பார்த்தல், வானொலி கேட்டல், வீடியோ கேம்ஸ், இணைய பயன்பாடு என தமது நேரத்தைக் கழித்துவிடுகின்றனர். இதனால், எந்தவிதமான மாற்றங்களும் இன்றி பாடசாலைப் பருவம் கடந்து விடுகின்றது.

எனவே, சிறுவர்கள் தாம் வாழும் சூழல் மற்றும் சமூகத்தின் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு சமூக அக்கறை கொள்பவர்களாகவும் நல்ல பழக்கவழக்கங்களைக் கொண்டவர்களாகவும் பழகிக்கொள்ள வேண்டும். சம வயதுடைய தோழர்- தோழியர்களுடன் சகோதரத்துவத்துடனும் தோழமையுடனும் மேற்கொள்ளப்படும் இவ்வாறான செயற்பாடுகள் உங்கள் வாழ்க்கைக்கு சிறந்த அனுபவத்தினை பெற்றுத் தரும்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதர வஞ்சகம்

அரசூரில் திவாகர், திவான், கார்த்திக், சந்துரு என்று நான்கு சகோதரர்கள் வாழ்ந்தனர். அவர்களது தந்தை இறக்கும்போது, தன் பெயரில் இருந்த சொத்துக்களை மகன்கள் நால்வருக்கு சமமாகப் பிரித்துக் கொடுத்திருந்தார்.

தம்பி சந்துரு மூன்று அண்ணன்கள் மீதும் பொறாமைப்பட்டான். மற்ற மூவரும் செல்வத்தை இழந்து வேதனைப்பட வேண்டும் என்று எண்ணினான். அவனது எண்ணத்தை செயலில் காட்டும் எண்ணத்தோடு, ஒரு கொள்ளைக்காரக் கும்பலை சந்தித்தான். அவர்களிடம் தன்னுடைய அண்ணன்களின் விலாசங்களைக் கொடுத்து கொள்ளையடிக்கச் சொன்னான். ஒவ்வொரு மாதத்திலும் ஒவ்வொரு அண்ணன் வீட்டில் கொள்ளையடிபட்டதைக் கேட்ட சந்துரு மகிழ்ந்தான். மூன்று மாதங்கள் முடிந்த பின் நான்காவது மாதம் சந்துருவின் வீட்டிற்கு அக்கொள்ளையர்கள் வந்தனர். அவர்களை பார்த்தவுடன் சந்துரு "என்னுடைய அண்ணன்கள் மூன்று பேருடைய வீடுகளிலும் கொள்ளையடித்தமைக்கு நன்றி. உங்களுக்கு பேசிய தொகையின் மிகுதியை தருகிறேன்" என்றான்.

"நீ என்ன எங்களுக்கு கூலி தருவது. நாங்களே



உன் வீட்டில் எங்களுக்குத் தேவையானதை எடுத்துக் கொள்கிறோம். ம்...ம் அலுமாரி சாவியைக் கொடு" என்று மிரட்டினர். "இருந்த சொத்துக்களையெல்லாம் இழந்து பரம ஏழையாயிருக்கும் என்னிடத்தில் ஏது சொத்து?" என்று கேட்டான் சந்துரு. "உன்னுடன் பிறந்தவர்களை ஏழைகளாக்க வேண்டும் என்ற எண்ணம் இந்த சொத்து உன்னிடத்தில் இருந்ததால்தான் வந்தது. இதே எண்ணம் எம்மை பழிவாங்க வராது என்பது என்ன நிச்சயம்? அதனால், இந்த சொத்துகள் அனைத்தும் உன்னிடத்தில் இருப்பதைவிட எம்மிடம் இருந்தால் நன்றாக இருக்கும். அலுமாரி சாவியை தருகிறாயா? இல்லையேல் எங்களுடைய கொள்ளைக் குணத்தோட 'கொலை' குணத்தையும் காட்டவா?" என்று மிரட்டினர்.

உயிரிருந்தால் சொத்து சம்பாதித்துக் கொள்ளலாம். உயிர் போய்விட்டால்.... என்று நினைத்த சந்துரு அலுமாரி சாவியைக் கொடுத்தான். கொள்ளையர்களும் பெறுமதியான பொருட்களையும் நகை, பணத்தையும் கொள்ளையடித்து சென்றார்கள். மற்றவர்களுக்கு கேடு நினைத்து செயல்பட்டதால் தன்னுடைய சொத்துக்கள் அனைத்தையும் இழக்க நேரிட்டதை எண்ணி மனம் வருந்தினான் சந்துரு.

# நல்ல நட்பு

ஒரு காட்டில் ஒரு பஞ்ச வர்ணக் கிளியும் காகமும் வாழ்ந்து வந்தன. கிளி காகத்தைக் காணும் போதெல்லாம் "கறுப்பா, கறுப்பா" என கிண்டல் அடிக்கும். ஆனால், காக்கையோ, தன் நண்பன் தானே என நினைத்துக்கொள்ளும்.

ஒருநாள் அக்காட்டிற்கு வந்த வேடன் ஒருவன் மரத்தின்மீது அமர்ந்திருந்த பஞ்சவர்ணக்



கிளியை பிடித்துக் கொண்டு தன் வீட்டிற்கு சென்றுவிட்டான். இதனைக் கண்ட காக்கை தன் நண்பனான கிளிக்கு ஆபத்து ஏதும் நிகழுமோ என்ற பயத்தில் வேடனை பின்தொடர்ந்து சென்றது. கிளியை வேடன் ஒரு கூண்டில் அடைத்துக்கொண்டு "அக்கா சொல்லு, ... அக்கா சொல்லு" என பாடாய் படுத்திக்கொண்டிருந்தான். இதனைப் பார்த்து வருத்தப்பட்டுக்கொண்டிருந்தது காகம். அன்று அமாவாசை நாள். வேடனின் மனைவி வாசல் சுவரில் பிதிர்சோறு வைத்து "கா... கா..." எனக் கூவி காகத்தை அழைத்தாள். அப்போது அங்கு வந்த காகம் சிலிர்த்துக்கொண்டவாறு கிளியைப் பார்த்து சொன்னது "கிளியே பார்த்தாயா? தன் மொழியில் உன்னைப் பேச வைக்கப் பாடாய் படுத்துகின்றான். ஆனால், என் மொழியில் கூவிக் கூப்பிட்டு எனக்கு சோறு வைக்கிறாள் அவனது மனைவி" என்று கூறிவிட்டு, காகம் சாப்பிட ஆரம்பித்தது. பிறகு கொஞ்ச நேரம் கழித்து யாரும் இல்லாத நேரம் பார்த்து கிளியின் கூண்டைத் திறந்துவிட்டு, "நண்பா வெளியே வா" என அழைத்தது. கிளியும் வெளியேறி வந்தது. இரண்டும் காட்டை நோக்கிப் பறந்தன.

கிளி காகத்தை நோக்கி "நண்பா மன்னித்துவிடு அறியாமல் நிறப்பாகுபாடு பார்த்து உன்னை மனம் நோகச் செய்துவிட்டேன். இனிமேல் இதுபோல் வேற்றுமை பார்க்க மாட்டேன்" என மனதார வருத்தப்பட்டது.

விரைவில்

சீக்ரட் சிக்ஸ்
இரகசிய குழு

தொடர்கதை

மர்ம ஒளி பரப்பியது
செவ்வாய்க்கிரக மனிதர்களா....?
உண்மையை கண்டறிய
களம் இறங்கிய இரகசிய குழு

எதிர்பாருங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகிலுள்ள பிரபல்யமான நூலகங்கள்


யாழ்ப்பாண நூலகத்தின் முகப்புத் தோற்றம்

மனிதனின் அறிவை விருத்தி செய்யும் களமாக நூலகங்கள் கருதப்படுகின்றன. இவ்வாறான நூலகங்களின் முக்கியத்துவத்தை அறிந்த அனைத்து உலக நாடுகளும் நூலகங்களுக்கென தனியான இடத்தை வழங்கியுள்ளன. அவ்வாறு உலக நாடுகளில் ஆரம்பித்து வைத்த மிக முக்கியமான நூலகங்கள் பற்றிய விபரங்களை இன்று பார்ப்போம்.

## வரலாறு

நூலகத்தின் ஆரம்ப வரலாறு ஏறக்குறைய 4000 ஆண்டுகளுக்கு மேல் பழமையானதாகும். கி.மு. 2000 ஆம் ஆண்டளவில் பாபிலோனியாவை ஆண்ட 'ஆசுர்-பனிபால்' என்னும் மன்னன் பல நூல்களை சேர்த்து போற்றிப் பாதுகாத்த நிலையமே உலகின் மிகப் பழமையான நூலகமாகும். இந்நூலகத்தில் 25 களிமண் பலகைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இங்கு வரலாறு, கணிதம்,வானியல் என பல்வேறு துறைசார் நூல்கள் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. இங்கு கண்டுபிடிக்கப்பட்ட 25 களிமண்ணாலான பலகைகளை இன்றும் பிரித்தானிய அருங்காட்சியகத்தில் காணக்கூடியதாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.


பிரிட்டிஷ் நூலகத்தின் முகப்புத் தோற்றம்

## பிரிட்டிஷ் நூலகம்

உலகில் உள்ள நூலகங்களிலேயே பிரிட்டிஷ் அரும்பொருட் காட்சியகத்தில் உள்ள நூலகத்தில் தான் மிகவும் அரிதான, விலைமதிக்க முடியாத நூல்கள் அடங்கியுள்ளன. இந்நூலகம் 1753 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்நூலகத்தில் 58,000 கையெழுத்துப் பிரதிகளும் 60 லட்சம் அச்சிடப்பட்ட நூல்களும், அனைத்து தின, வார, மாதப் பத்திரிகைகள், சஞ்சிகைகளும் மாதந்தோறும் ஆயிரக்கணக்கில் சேர்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவிலுள்ள நூலகங்கள்

இந்தியாவில் குழந்தைகளுக்கான முதல் நூலகம், தமிழ்நாட்டில் உள்ள சென்னையில் தான் ஆரம்பிக்கப்பட்டது. 1600 ஆம் ஆண்டுகளில் தஞ்சாவூரில் தஞ்சை மன்னரான சரபோஜி மன்னரால் ஏற்படுத்தப்பட்ட சரஸ்வதி மகால் நூலகம் மிகவும் சிறப்பு வாய்ந்ததும் அரிய பல நூல்களைக் கொண்ட நூலகமாகவும் திகழ்கின்றது. இதனைத் தவிர 1847 இல் சென்னையில் ஆரம்பிக்கப்பட்ட கையெழுத்துச் சுவடிகள் அடங்கிய நூலகமும் சென்னை கன்னிமாரா நூலகமும், சென்னை பல்கலைக்கழக நூலகம் என்பன இந்திய நூலகங்களில் சிறப்பு வாய்ந்தவையாகும்.

## இலங்கையின் நூலகம்

1981 ஜூன் 01 ஆம் திகதி எரியூட்டப்பட்ட யாழ்ப்பாண நூல் நிலையம் ஆசியாவின் மிகச் சிறந்த நூல் நிலையங்களில் ஒன்றாக திகழ்ந்தது. இந்நூலகத்தில் அரிய பல தமிழ் நூல்களும் கையெழுத்துப் பிரதிகளும் இருந்தன.

(-அ)

செலிங்கோ லைஃப் பிரணாம வீரர்கள்

செலிங்கோ லைஃப் உடன் வெற்றி
பெறுவதற்கான வரத்தை
உங்கள் பிள்ளைக்கும் பெற்றுக்கொடுங்கள்

இம் முறை 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு உங்கள் பிள்ளை தோற்றுவதாயின், எங்களுடன் பதிவு செய்து விஷேட வரப்பிரசாதங்களை பெற்றுக்கொடுங்கள்.

5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெறும் அனைத்து பிள்ளைகளுக்கும் செலிங்கோ லை.'.ப் இடமிருந்து பெறுமதிமிக்க சான்றிதழ்.

செலிங்கோ லை.'.ப் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றை பெற்றுக்கொள்பவர்களின் பிள்ளைகளுக்கு விஷேட பரிசுகள்.

அகில இலங்கையில் அதிகூடிய புள்ளிகளை பெற்றுக்கொள்ளும் 10* மாணவர்களுள் ஒருவராக உங்கள் பிள்ளையும் இருப்பின் அவருக்கு கல்வியை தொடர்வதற்காக ரூ. 50,000 வரை புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.

பதிவு செய்வதற்கு அல்லது மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு அழையுங்கள் (011) 2 461 461 இல்லையெனில் அருகிலுள்ள செலிங்கோ லை.'.ப் கிளைக்கு செல்லுங்கள்.

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது


வாழ்க்கை, பாசம், பாதுகாப்பு.

செலிங்கோ லைஃப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கோடை ஒலிம்பிக் போட்டிகள் கடந்த 5 ஆம் திகதியன்று பிரேஸிலின் ரியோ டி ஜெனீரோ நகரில் ஆரம்பமாகியது. 'ரியோ 2016' என பெயரிடப்பட்டுள்ள இந்த ஒலிம்பிக் போட்டியானது, 31 ஆவது ஒலிம்பிக் போட்டி என்பது குறிப்பிடத்தக்கது. எதிர்வரும் 21 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள மேற்படி ஒலிம்பிக் போட்டிகள், ரியோடி ஜெனிரோ நகரில் மட்டுமல்ல பிரேஸிலின் தலைநகரம், அந்நாட்டின் மிகப்பெரிய நகரமான சாஓ பாவுலோ நகரம், மானாஹுஸ், ஹொரிசொன்டோ, சல்வடோர் ஆகிய நகரங்களிலும் பல்வேறு போட்டிகள் இடம்பெறுகின்றன.

சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் அறிவிப்பின்படி, இந்தத் தடவை ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்ள வருகின்ற போட்டியாளர்கள் மற்றும் அதிகாரிகளின் மொத்த எண்ணிக்கை 10,550 இற்கும் அதிகமாகும்.




கி.மு. 776

2016



ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் கி.மு. 776 வருட வரலாற்றைக் கொண்டது. பண்டைய கிரேக்க நாட்டின் ஒலிம்பியாவில் விளையாட்டுப் போட்டியொன்று நடைபெற்றது. இதில் ஓட்டப் போட்டி மாத்திரமே நடைபெற்றது. காலப்போக்கில் தடகள போட்டிகள் உட்பட மேலும் பல போட்டிகளும் இதில் இடம்பெறத் தொடங்கின.




# ஒலிம்பிக் உருவான





ஒலிம்பியாவில் நடைபெற்ற இந்த போட்டிகளில் கிரேக்க மொழியை சரளமாகப் பேசக்கூடிய கிரேக்க இளைஞர்களுக்கு மாத்திரமே வாய்ப்பு வழங்கப்பட்டது. இவர்கள் உடம்பில் ஆடை எதுவும் இன்றியே போட்டியில் கலந்துகொண்டனர். இதில் வெற்றியீட்டுவோருக்கு 'ஒலிவ்' மர இலையினால் செய்யப்பட்ட கிரீடம் சூட்டப்பட்டது. சமாதானத்தையும், சமாதானத்தின் தேவையையும் உணர்த்தும் வகையிலேயே இவ்வாறு 'ஒலிவ் கிரீடம்' சூட்டப்பட்டது. பண்டைய ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்வதற்கு பெண்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

## 1863




## ஃபிரெடி குபேட்டின்

பண்டைய கிரேக்கத்தின் ஒலிம்பியாவில் அவ்வாறு ஆரம்பமாகிய இந்த விளையாட்டுப் போட்டிகளை அடியொட்டியே இன்றைய நவீன ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாகின. நவீன ஒலிம்பிக் போட்டிகளின் ஆரம்ப கர்த்தாவாக இருந்தவர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஃபிரெடி குபேட்டின் என்பவராவார். இவர் 1863 ஆம் ஆண்டில் பிறந்தவராவார். இளமைப் பருவத்தில் இவர் சிறந்தவொரு விளையாட்டு வீரராக இருந்தார். வயோதிப வயதை அடையும்போது இவர் உலக அமைதி மற்றும் சகவாழ்வை ஏற்படுத்துவதற்கு விளையாட்டை சிறந்தவொரு களமாகப் பயன்படுத்தலாம் என நம்பினார். அதற்கமையவே, பண்டைய கிரேக்கத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளை அடியொட்டியதாக 'olympic games' (ஒலிம்பிக் போட்டிகள்) எனும் பெயரில் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான திட்டத்தை அவர் வகுத்தார்.

குபேர்டின் இந்த கனவானது, 1894 ஆம் ஆண்டில் நனவாகத் தொடங்கியது. அதன்படி உலக நாடுகள் பலவற்றின் பிரதிநிதிகளை பிரான்ஸின் பெரிஸ் நகரிற்கு வரவழைத்ததுடன், அவர்களின் ஒன்றுகூடலில் விளையாட்டுப் போட்டியொன்றை நடத்துவதற்கான பேச்சுவார்த்தைகளையும் அவரால் நடத்த முடிந்தது. இதுவே 'ஒலிம்பிக் போட்டிகளின்' ஆரம்ப காலடியாக அமைந்தது. இதன் பிரதிபலனாக, முதலாவது நவீன ஒலிம்பிக் போட்டிகள் 1896 ஆம் ஆண்டில் கிரேக்க நாட்டின் ஏதன்ஸ் நகரில் நடைபெற்றது.

## 1900

முதலாவது நவீன ஒலிம்பிக் போட்டிகளில்கூட பெண் போட்டியாளர்கள் பங்குபற்றுவதற்கு வாய்ப்பளிக்கப்படவில்லை. 1900 ஆம் ஆண்டில்தான் பெண்களும் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்வதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது. 1900 ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் முழு உடம்பையும் மறைத்த விதமான ஆடைகளை அணிந்து கொண்டே பெண்கள் போட்டிகளில் கலந்துகொண்டனர்.



ஒலிம்பிக் போட்டியானது, இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை நடைபெறும். கடைசியாக 2014ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் ரஷ்யாவின் 'சோச்சி' நகரில் நடைபெற்றது. அதற்கு முன்னர் 2012 ஆம் ஆண்டில் பிரிட்டனின் லண்டன் நகரில் நடைபெற்றது.

ஒவ்வொரு நாட்டிலும் அவ்வவ் நாட்டிற்கென ஓர் ஒலிம்பிக் கமிட்டி அமைக்கப்பட்டிருக்கும். 'தேசிய ஒலிம்பிக் கமிட்டி' என்று இது அழைக்கப்படுகின்றது. நாட்டின் தேசிய மட்டத்தில் திறமைகளை வெளிப்படுத்துகின்ற வீர, வீராங்கனைகள் மற்றும் அணிகளை இனங்கண்டு அவர்கள் ஒலிம்பிக் போட்டிகளுக்கு தகுதி காணப்பட்டு தெரிவு செய்வது இந்த தேசிய ஒலிம்பிக் கமிட்டியேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு

## 1894

**1894** ஆம் ஆண்டில் குபேட்டின் அவர்களினால் ஒலிம்பிக் போட்டிகளுக்கான திட்டங்களை வகுக்கும்போது இதற்கென 'கமிட்டி' ஒன்றை உருவாக்கியிருந்தார். இதுவே 'சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி' என்று அழைக்கப்படுகின்றது.



## உறுப்பினர்கள் 130

ஆரம்பத்தில் ஒலிம்பிக் கமிட்டியில் **14** உறுப்பினர்கள் இருந்தனர். இன்று உறுப்பினர்கள் தொகை **130** ஆக அமைந்துள்ளது. பிரெஞ்சு அல்லது ஆங்கிலம் மொழி சரளமாகத் தெரிந்தவர்கள் மாத்திரமே ஒலிம்பிக் கமிட்டியில் உறுப்பினர்களாக பதவி வகிக்க முடியும். அவசியமேற்படின் புதிய உறுப்பினர்களை நியமிக்க வேண்டி ஏற்படின் கமிட்டியின் ஏனைய உறுப்பினர்கள் மூலமே அதற்கான தேர்வுகள் நடைபெறும். சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி சுவிட்ஸர்லாந்து நாட்டின் 'லுசேன்' நகரிலேயே அமையப்பெற்றுள்ளது.

ஒலிம்பிக் போட்டிகள் எங்கு நடத்தப்பட வேண்டும் என்பதை சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியே தீர்மானிக்கும். ஒலிம்பிக் போட்டியானது, ஒரு நாட்டை முன்நிறுத்துவதைவிட ஒரு நகரை முன்னிறுத்தியே நடத்தப்படுகின்றது. அதன்படி இம்முறை 2016 ஒலிம்பிக் போட்டிகள் பிரேஸில் நாட்டில் நடைபெறுகின்ற போதிலும், அந்நாட்டின் 'ரியோடி ஜெனிரோ' நகரை கேந்திர மையமாகக் கொண்டு நடைபெறுவதால் 'ரியோ ஒலிம்பிக்' என்றே இதற்கு பெயரிடப்பட்டுள்ளது. ஒலிம்பிக் போட்டியை நடத்துவதற்கான போதிய நிதிவசதியும், ஏனைய வசதிகளையும் கொண்டுள்ள எந்தவொரு நாடும் ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கு விண்ணப்பிக்க முடியும். உரிய கேள்வி மனுக்கோரலின் அடிப்படையில் எந்த நாட்டிற்கு/நகரத்திற்கு வாய்ப்பை வழங்குவது என்பது தீர்மானிக்கப்படும். ஒலிம்பிக் போட்டிகளுக்கான அரங்கங்களை அமைத்தல் உட்பட இதர விடயங்களை செய்து முடிப்பதற்கு பல வருடங்கள் தேவைப்படுவதுண்டு. இதற்குண்டான நிதியுதவியை ஒலிம்பிக் கமிட்டி வழங்கினாலும், அதிகப்படியான பொறுப்பினை போட்டியை நடத்தும் நாடே பொறுப்பேற்க வேண்டியிருக்கும்.






## தோமஸ் பெக்

குபேட்டின் அவர்கள், 29 வருடங்கள் ஒலிம்பிக் கமிட்டியின் தலைவராக பணியாற்றியிருந்தார். அதன்பின்னர் இற்றைவரை 9 பேர் ஒலிம்பிக் கமிட்டியின் தலைமைப் பொறுப்பை வகித்துள்ளனர். இம்முறை (2016) ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறுகின்ற இத்தருணத்தில் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் தலைவராக செயற்படுபவர் தோமஸ் பெக் என்பவராவார்.

## வெற்றி அல்ல பங்குபற்றலே பிரதான நோக்கம்



ஒலிம்பிக் போட்டிகளின் பிரதான நோக்கம் வெற்றி அல்ல. பங்குபற்றலே என்பதேயாகும். முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறுகின்ற வெற்றியாளர்களுக்கு முறையே தங்கம், வெள்ளி, வெண்கலம் என பதக்கங்கள் வழங்கப்படும்.





ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாவதற்கு முன்னர், ஒலிம்பிக் தீப்பந்தம் கிரேக்க நாட்டின் ஒலிம்பியா நகரிலிருந்து கொண்டு செல்லப்படும். இவ்வாறு ஒலிம்பிக் அரங்கிற்கு கொண்டு வரப்படுகின்ற தீப்பந்தமானது, போட்டி நடைபெறும் நாட்டின் போற்றுதலுக்குரிய விளையாட்டு வீரர் அல்லது வீராங்கனையின் கைக்கு ஒப்படைக்கப்படும்.இந்த தீப்பந்தத்தைக் கொண்டு அரங்கில் அமைக்கப்பட்டுள்ள பிரமாண்டமான தீப்பந்தத்தை அவர் எரியச் செய்வார்.



## 1913

## சிட்டியஸ், எல்டியஸ், ஃபொரிடஸ்



ஒன்றுடன் ஒன்று பிணையப்பட்ட ஐந்து வர்ணங்களையுடைய வளையல்களே, ஒலிம்பிக்கின் உத்தியோகபூர்வ லட்சினையாகும். நீலம், மஞ்சள், கறுப்பு, பச்சை, சிகப்பு ஆகிய நிறங்களை இந்த வளையங்கள் கொண்டிருக்கும். இந்த உத்தியோகபூர்வ லட்சினையை **1913** ஆம் ஆண்டில் குபேட்டின் அவர்கள்தான் அறிமுகப்படுத்தினார். உலகின் ஐந்து கண்டங்களைக் குறிக்கும் வகையிலேயே இவ்வாறு 5 வளையங்களை அவர் தெரிவுசெய்திருந்தார்.

'சிட்டியஸ், எல்டியஸ்,ஃபொரிடஸ்' என்பதே ஒலிம்பிக்கின் முன்னோடி தொனிப் பொருளாகும். இந்த சொற்கள் லத்தீன் மொழி சொற்களாகும். 'வேகமாக, உயர்வாக, பலமுடன்' என்பதே இதன் அர்த்தமாகும்.

கோடை ஒலிம்பிக் போட்டி மட்டுமன்றி இன்னும் இரண்டு ஒலிம்பிக் போட்டிகளும் உள்ளன. அவை 'குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள்' மற்றும் 'பராலிம்பிக் போட்டிகள்' ஆகியனவாகும். குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளானது, பனி விளையாட்டுக்கள் விளையாடப்படுவதாகும். குறிப்பாக, பனி மழை பொழிகின்ற நாடுகளிலேயே இப்போட்டிகள் நடைபெறும். குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் முதல் தடவையாக நடைபெற்றது **1924** ஆம் ஆண்டிலாகும். பிரான்ஸ் நாட்டின் 'ஷெமோனி' நகரிலேயே இந்த முதல் போட்டி நடைபெற்றது. ஆரம்பத்தில் கோடை ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் அதே வருடத்திலேயே, குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளும் நடத்தப்பட்டது. ஆனால், **1994** ஆம் ஆண்டின் பின்னர் குளிர்கால ஒலிம்பிக் போட்டியானது, கோடை ஒலிம்பிற்கு முன்னரோ, பின்னரோ நடத்தப்பட்டு வருகின்றது.

பிரதான ஒலிம்பிக் போட்டிகளான 'கோடை ஒலிம்பிக் போட்டிகள்' முடிவடைந்த பின்னர் 'பராலிம்பிக்' போட்டிகள் ஆரம்பமாகும். மாற்றுத்திறனாளிகள் (உடல் குறைபாடுகளுடையோர்) பங்கு கொள்வதற்கென நடத்தப்படும் விசேட ஒலிம்பிக் போட்டியே இதுவாகும். இந்த போட்டிகளும் கோடை ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்ற அதே இடத்திலேயே நடைபெறும். **1960** ஆம் ஆண்டிலேயே 'பராலிம்பிக்' போட்டிகள் ஆரம்பமாகின.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## முன்னோடி வினாப்பத்திரம் (பகுதி-I)


பெயர்: ...............................................


★ பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிந்து அதன்கீழ் கீறிடுக.

01.  இங்குள்ள உருவைப் பூரணப்படுத்துவதற்கு கீழே தரப்பட்டுள்ள பகுதிகளிலிருந்து சரியான பகுதியை தெரிவுசெய்க.




02. கீழுள்ள தராசில் நிறை குறைவான பகுதிக்கு இடக்கூடிய உருக்கூட்டத்தைத் தெரிவு செய்க.







03.  இவ்வுருவிலுள்ள நாற்பக்கங்களின் எண்ணிக்கை யாது?

1. 10 2. 7 3. ---

04. பின்வருவனவற்றுள் சரியான உருச் சோடியைத் தெரிக.




1. AE
2. CD
3. DB

05. இவ்வுருக்களுக்கமைய நிறை கூடியது எது?






### முன்னோடி வினாப்பத்திரம் (பகுதி-II)

(ஓகஸ்ட் 03 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

01) 1. பயன் 2. நல்ல
3. சூழலை தூய்மைப்படுத்துகிறது/ மண்ணரிப்பைத் தடுக்கிறது/ மழைவீழ்ச்சிக்கு உதவுகிறது
4. பறவைகளுக்கு
5. ★ உயர்திணை: மனிதன்
★ அஃறிணை: விலங்குகள்/ பறவைகள்/தாவரங்கள்
6. மனிதன்

02) 1. மலர்+செண்டு 2. பிள்ளை/கன்று 3. பிளிறும்
4. குணப்பெயர் 5. சுக-துக்கம்

03) 1. விளையாட்டு மைதானத்திற்கு செல்வோம்
2. தயவு செய்து கதவை மூடுங்கள்

04) 1. இது எனது பாடசாலை 2. இது அழகான வண்ணத்துப்பூச்சி


05) 1. 2 2. 3 3. 3 4. 1 5. 2

06) 1. 40 ஏக்கர் 2. 20 ஏக்கர் 3. 80 ஏக்கர்
4. 2/8 5. வாழை


## முன்னோடி வினாப்பத்திரம் (பகுதி-II)

★ கீழ்வரும் வினாக்களுக்கு சரியான விடையை கீறிட்ட இடத்தில் இடுக.

01. பின்வரும் உருக்களின் சுற்றளவைக் காண்க.


(i) 

...........................

(ii) 

...........................

02. நிறந்தீட்டப்பட்ட பகுதி முழு உருவின் என்ன பின்னம்?




...........................

03. மாணவி ஒருவர் பயணத்தின் $\frac{2}{5}$ பங்கை வண்டியிலும், மீதித் தூரத்தை நடந்தும் பயணம் செய்வாள். அவர் நடந்து சென்ற தூரம் 6km ஆயின், முழுத் தூரம் எவ்வளவு?

...........................................

04. வகுப்பிலுள்ள ஆங்கிலம், தமிழ் பேசும் மாணவர்களின் எண்ணிக்கை உருவில் காட்டப்பட்டுள்ளது. வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை 45 எனின், இரு மொழிகளிலும் பேசும் மாணவர்களின் எண்ணிக்கை யாது?




.......................

05. தோடம்பழத்தை சரி பாதியாக வெட்டி ஒரு பாதியை அம்மாவுக்கு கொடுத்தேன். மிகுதியில் $\frac{1}{2}$ பங்கை தம்பிக்குக் கொடுத்தேன். எனக்கு மிஞ்சிய பகுதி. முழுத்தோடம்பழத்தின் எத்தனை பங்காகும்?

...................................................

### முன்னோடி வினாப்பத்திரம் விடைகள்

பகுதி -I

01. 2 02. 1 03. 1 04. 3 05. 3

பகுதி -II

01. (i) 62cm (ii) 48cm

02. $\frac{2}{5}$ 03. 10km 04. 9 05. $\frac{1}{4}$

Digitized by Noolaham Foundation.

# தொலைக்காட்சி ஒளிப்பதிவும் எடிட்டிங் முறைகளும்



தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஒளிப்பதிவு செய்யப்பட்ட ஆரம்ப நாட்களில் காட்சிகளை (Visuals) பதிவுசெய்வதற்காக பயன்படுத்தப்பட்ட ஒளிப்பேழை (Video cassette) பீட்டாமெக்ஸ் (Betamax) என்ற வகையைச் சேர்ந்ததாக இருந்தது. இதே சமகாலத்தில் VHS எனும் ஒளிப்பேழையும் பாவனையில் இருந்தது. இருப்பினும் 'பீட்டா மெக்ஸ்' எனும் ஒளிப்பேழையே தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை துல்லியமாக பதிவு செய்யக்கூடிய தன்மையைக் கொண்டிருந்தமையால் அதனையே தொலைக்காட்சிப் பதிவுகளுக்கு பயன்படுத்தினர். VHS ஒளிப்பேழையானது, வீடுகளில் பயன்படுத்திய 'வீடியோ டெக்' (Video deck) கருவிகளுக்கே பயன்படுத்தப்பட்டது.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட ஒளிப்பதிவு நிகழ்ச்சிகள் நேர சூசிகைப்படி ஒளிபரப்பாகியதன் பின்னர் அவை களஞ்சிய அறையில் பத்திரப்படுத்தப்பட்டன. நாட்கள் பல கழிந்தாலும் அவற்றை மீண்டும் ஒளிபரப்ப வேண்டிய தேவை ஏற்படின் உடனடியாக அவற்றைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையிலேயே ஒரு நூலகத்தில் எவ்வாறு புத்தகங்கள் ஓர் ஒழுங்கில் வைக்கப்பட்டிருக்குமோ அவ்வாறே, இந்த

## ஊடக பாடநெறி பாகம்-II
பாடம் - 116

ஒளிப்பேழைகளும் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருக்கும். பத்திரிகையில் செய்திகளை வெட்டி, புனர்த்தி,செப்பனிடல் செய்யப்படுவதை 'எடிட்டிங்' என்று எவ்வாறு கூறுகின்றோமோ... அதேபோல்தான் ஒளிப்பதிவு செய்யப்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் தொழில்நுட்பவியலாளரால் 'எடிட்டிங்' செய்யப்படுவ






துண்டு. நிகழ்ச்சியானது, ஒன்றுக்கும் மேற்பட்ட கெமராக்களினால் ஒளிப்பதிவு செய்யப்பட்டிருக்கலாம்; இந்த ஒவ்வொரு கெமராவிலிருந்தும் பெறப்பட்ட காட்சிகள் தனித்தனியாக பதிவாகியிருக்கும்.

ஒளிப்பதிவு முடிவடைந்த பின்னர், இந்த தனித்தனி கெமராக்களிலிருந்து பெறப்பட்ட காட்சிகளில் பொருத்தமானகாட்சிகளை தேர்ந்தெடுத்து மற்றுமொரு பிரதான ஒளிப்பேழையில் தொகுத்துக்கொள்ளும் முறையே 'எடிட்டிங்' கில் கையாளப்படுகின்றது. சில சந்தர்ப்பங்களில் ஒளிப்பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சியில் கலந்துகொண்டோரினால் சில தவறுகள் அல்லது பொருந்தாத சில செயல்கள் நடைபெற்றிருக்கலாம். அவையும்கூட குறித்த ஒரு ஒன்றிரண்டு கெமராக்களினூடே பதிவாகியிருக்கலாம். எனினும், இவை தவிர்க்கப்பட வேண்டிய காட்சிகளாக இருப்பின் மற்றைய கெமராவில் பதிவாகிய வேறு ஒரு கோணத்திலான காட்சியையோ அல்லது தூரக் காட்சியொன்றையோ இத்துடன் இணைத்து தவிர்க்கப்பட வேண்டிய காட்சிகளை 'எடிட்டிங்' செய்பவர் தவிர்த்து காட்சிகளை தொகுப்பார். இவ்வாறான எடிட்டிங் முறை மிகவும் நுணுக்கமாக கையாளப்பட வேண்டியதாகும்.

(தொடரும்)


-ரிஷபன்

## ஏன்? எப்படி?



**கேள்வி:** முயலினை நாய் துரத்தும்போது, இவற்றுக்கிடையில் மிகக் கடுமையான போட்டி நிலவுகின்றது இது ஏன்?

**பதில்:** நாயின் செவிகள் முன்னோக்கி குவிவாக அமைந்துள்ளமையினால் முன்நோக்கி வரும் ஒலியினை கேட்கும் ஆற்றல் கொண்டது. அதேவேளை, முயலில் பின்னோக்கி அமைந்துள்ள பெரிய காதுகளினால் பின்னோக்கி வரும் ஒலியினை அறிந்துகொள்ள முடியும். இத்தகைய சிறப்புத் தன்மையை இவை கொண்டுள்ளமையால் இவை மிக வேகமாக ஒன்றையொன்று முந்திக்கொண்டு ஓடும் வேகத்தைப் பெற்றுள்ளன.





**கேள்வி:** வீட்டு மின் சுற்றோட்டத்தில் பியூஸ் (Fuse) பயன்படுத்தப்படுவது ஏன்?

**பதில்:** 'பியூஸ்' என்பது மிகவும் மெல்லிய கம்பித்துண்டாகும். இதனூடாக அதிக அளவு மின் பயணிக்கும்போது அந்த கம்பி எரிந்து மின் சுற்றோட்டத்தை தடுக்கும். இதன்போது வீட்டு மின் சுற்றோட்டத்தில் மின்னானது, திடீரென அதிகரிக்கக் கூடும். சிலவேளை வீடுகளில் இயங்கும் மின் சாதனங்களில் கோளாறு ஏதும் நிகழும் சந்தர்ப்பத்தில் ஏற்படும் அதிக மின்சக்தியால் பியூஸ் கம்பியினை அது எரித்துவிடும். இதனால் மின் சுற்றோட்டம் தடைப்பட்டு மற்றைய மின் உபகரணங்கள் பாதுகாக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# பெத்தகான ஈரநிலப் பூங்கா




















மக்கள் மனதினைக் கொள்ளை கொள்ளும் இயற்கை அழகு மிகுந்த பெத்தகான ஈரநிலப் பூங்கா ஸ்ரீ ஜயவர்தனபுரவிலுள்ள புதிய நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியின் அருகாமையில் அமைந்துள்ளது. தியவன்ன வாவியின் கரையோரப் பகுதியில் அமைந்துள்ள இந்த ஈரநிலம் வனஜீவிகள் பாதுகாப்பு திணைக்களத்தினால் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ள ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே பறவைகள் சரணாலயத்தின் எல்லைப்பகுதிக்குள்ளும் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த பசுமை வலயமானது, 18 ஹெக்டயார் பரப்புக் கொண்டது. இங்கு ஈர வலய தாழ்ப்பகுதியில் காணக் கிடைக்கும் உள்நாட்டுப் பறவைகள், வண்ணத்திப்பூச்சிகள், வெட்டுக்கிளிகள் பலவற்றினையும் மேலும் பல சிறப்புக்குரிய மரங்களையும் காணக்கூடியதாகவுள்ளது.

இந்த பூங்கா தயார்ப்படுத்தலின் போது, கனரக வாகனங்கள் பயன்பாடுகள் இன்றி தூண்கள் மீது நிர்மாணிக்கப்பட்ட பறவைகள் கண்காணிப்பு கோபுரங்கள், பயணப் பாதை மற்றும் பறவைகள் கண்காணிப்பு பகுதிகள் என்பன நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைக் கண்டுகளிப்பதற்கான நடைபாதைகள் (Sidewalk) நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன், பூங்காவினை தொடர்புபடுத்தும் பாதைகள் மூலம் பெத்தகான ஈரநிலப் பூங்கா மற்றும் சுற்றுப்புறத்தில் உள்ள இதர பூங்காக்கள் தொடர்புபடுத்தப்பட்டு மெருகூட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

(-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவின் சட்டவிரோத நடவடிக்கையால் கினியாவின் மீன் வளம் அருகி வருகின்றது...



சீன மீன்பிடிப் படகுகள் கினியா நாட்டின் கடற்பிராந்தியத்தில் சட்டவிரோதமான முறையில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. சீன மீன்பிடிப் படகுகளின் இந்த நடவடிக்கைகள் காரணமாக, கினியாவின் கடற்பிராந்தியத்தில் மீன்களின் எண்ணிக்கை குறைவடைந்து வருவதுடன், கடல் வளங்களும் அழிவினை எதிர்நோக்கி வருகின்றன.

எவ்வாறாயினும், ஒரு நாட்டிற்குரிய கடல் எல்லையில் மற்றுமொரு நாடு அத்துமீறிப் பிரவேசித்து மீன் பிடிப்பது சட்ட விரோத செயலாகவே கருதப்படுகின்றது. இந்த சட்டவிரோத மீன்பிடிப்புக் காரணமாக, கினியாவில் சமூக மற்றும் பொருளாதார பாதிப்புகள் எதிர்நோக்கப்படுகின்றபோதிலும், தமது கடல் எல்லையினைப் பாதுகாத்துக்கொள்வதற்கு தேவையான நிதி வசதிகள் அந்த நாட்டில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இன்றுவரை பாரம்பரிய முறைக்கமைய, பழமையான படகுகளைப் பயன்படுத்தி மீன்பிடித்தொழிலில் ஈடுபடுகின்ற கினியா நாட்டு மீனவர்கள், சீனாவின் இத்தகைய செயற்பாடுகளினால் மீன் பிடிக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதோடு, அவர்களுக்கு கிடைக்கும் மீன் அறுவடை மிகவும் குறைவடைந்தும் உள்ளது.

## சட்டவிரோத மீன்பிடிப்பிற்குக் காரணம்

கினியாவின் மீன்பிடி தொழிலாளர்கள் சங்கத்தின் முக்கியஸ்தர் ஒருவரின் கருத்தின் படி, சீன மீனவர்களின் இந்த மீன் கொள்ளைக்கு காரணம்





‘யெல்லோ க்ரோக்கர்’ என்ற மீனினமாகும். ஆசியப் பிராந்தியத்தில் அதிக விலை போகும் மீனினமாக இது உள்ளது. தற்போது சீனக் கடலில் இருந்து இந்த மீனினம் முற்றாக அழிந்து விட்டது. எனவே, இந்த மீன்களை பிடிப்பதற்காகவே அவர்கள் கினியன் கடற்பரப்பிற்குள் பிரவேசிக்கின்றனர்.

பொட்டம் ட்ரோலர் என்று அழைக்கப்படும் சீன ட்ரோலர் படகுகள், உலகின் மற்றைய கடற்பிராந்தியங்களில் தடை செய்யப்பட்டுள்ளன. இத்தகைய படகுகளினால் கடல் வளங்களுக்கு பேரழிவு ஏற்படுகின்றமையே இதற்கு காரணமாகும்.

எனினும், கினிய மீனவர்களின் பாரம்பரியம் மீன்பிடி நடவடிக்கைகளினால் கடல்வாழ் உயிரினங்களுக்கும் கடல் வளங்களுக்கும் எந்தவிதமான பாதிப்புகளும் ஏற்படுவதில்லை. இவ்வாறு கினியாவின் மீன்பிடி தொழிற்துறையில் ஏற்படும் வீழ்ச்சியானது, அங்குள்ள மீன்பிடி சமூகத்தினை மட்டுமன்றி, நாட்டின் பொருளாதாரத்தையும் பெரிதும் பாதிப்பதாக அமையும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

உங்கள் அபிமான
தமிழ் Mirror
திங்கள் முதல் வெள்ளிவரை
விலை Rs.10/=
தினசரி தேசிய பத்திரிகையாக
வெளிவருகிறது
wijeyanewspapers helping shape opinions
the SUNDAY TIMES
விஜய்
DailyMirror
தமிழ் Mirror www.tamilmirror.lk
விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் உயிர்ப்பல்வகைமை

இலங்கைக்குரிய நிலப்பரப்பின் வரலாறானது, இற்றைக்கு சுமார் 3 பில்லியன் ஆண்டுகள் பின்னோக்கிச் செல்கின்றது. இலங்கையில் இனங்காணப்பட்டுள்ள உயிரினங்களின் பரவல், நிலப் பகுதியின் பௌதிக மற்றும் இயற்கை தன்மைகளைக் குறிக்கும் கேந்திர நிலையங்கள், காலநிலை அடிப்படையிலான நீராதார மற்றும் பௌதிக சுற்றாடல் தொகுதிகள் என பலவும் இங்கு அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், கடல் சார்ந்த சுற்றாடல் தொகுதிகள் பலவும் இலங்கையில் உள்ளன. இவை தவிர, மனிதனால் உருவாக்கப்பட்ட சுற்றாடல் தொகுதிகளும் இங்கு காணப்படுகின்றன. இவை அனைத்தையும் உள்ளடக்கிய இலங்கையின் உயிர்ப்பல்வகைமை பற்றி நோக்குவோம்.

## உயிர்ப்பல்வகைமை BIODIVERSITY

உலகின் இருப்பிற்கு இன்றியமையாத அங்கமாக 'உயிர்ப்பல்வகைமை' (Biodiversity) காணப்படுகின்றது. உலகில் வாழும் மில்லியன் கணக்கான விலங்குகள் மற்றும் தாவரங்கள் இந்த உயிர்ப்பல்வகைமையில் அடங்கும். இது பற்றி உலக மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் முகமாக ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையில் 1992 ஆம் ஆண்டு உயிர்ப்பல்வகைமை பற்றிய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

### உயிர்ப்பல்வகைமை என்பது...

உயிர்ப்பல்வகைமை என்பது, பூமியில் வசிக்கும் பலதரப்பட்ட உயிரினங்களைக் குறிக்கும் சொல்லாகும். இது மூன்று வகைப்படும்.

**01 மரபியற் பல்வகைமை** குறிப்பிட்டதோர் இனத்தைச் சார்ந்ததாக பலதரப்பட்ட உயிரினங்கள் இருக்கும் நிலையினையே இது குறிக்கின்றது.

**02 இனப் பல்வகைமை** ஒரு பிரதேசத்தில் வாழும் பலதரப்பட்ட இனங்கள் இதில் அடங்கும்.

**03 சூழல் தொகுதி பல்வகைமை** குறிப்பிட்டதோர் இடத்திலுள்ள சூழல் தொகுதிகளில் காணப்படும் வேறுபாடுகளை இது குறிக்கின்றது.

| விதைமூடிய தாவரங்கள் | வித்துமூடியிலி தாவரங்கள் | பன்னங்கள் | பாசி வகைகள் | லைக்கன் வகைகள் |
|---|---|---|---|---|
| தாவர இனங்களின் எண்ணிக்கை 4203+ | தாவர இனங்களின் எண்ணிக்கை 35+ | இனங்களின் எண்ணிக்கை 336 | இனங்களின் எண்ணிக்கை 560+ | இனங்களின் எண்ணிக்கை 661 |



**அனைத்து தாவர, விலங்கின பல்வகைமை**
தாவர, விலங்கினங்களின் மொத்த எண்ணிக்கை 7,828
தனித்துவமான இனங்களின் எண்ணிக்கை 1,691
தனித்துவமற்ற இனங்களின் எண்ணிக்கை 6,137

**பாலூட்டிகள் Mammals**
இனங்களின் மொத்த எண்ணிக்கை 141
தனித்துவமான இனங்களின் எண்ணிக்கை 120
தனித்துவமற்ற இனங்களின் எண்ணிக்கை 21

**தரைவாழ் நத்தைகள் Land Snail**
இனங்களின் மொத்த எண்ணிக்கை 254
தனித்துவமற்ற இனங்களின் எண்ணிக்கை 51
தனித்துவமான இனங்களின் எண்ணிக்கை 203


**ஊர்வன Reptiles**
இனங்களின் மொத்த எண்ணிக்கை 127
தனித்துவமற்ற இனங்களின் எண்ணிக்கை 131
தனித்துவமான இனங்களின் எண்ணிக்கை 86

**தேள்கள் Scorpions**
இனங்களின் மொத்த எண்ணிக்கை 18
தனித்துவமற்ற இனங்களின் எண்ணிக்கை 04
தனித்துவமான இனங்களின் எண்ணிக்கை 14

**ஈரூடகவாழிகள் Amphibians**
இனங்களின் மொத்த எண்ணிக்கை 119
தனித்துவமற்ற இனங்களின் எண்ணிக்கை 14
தனித்துவமான இனங்களின் எண்ணிக்கை 105

**பூரான்கள் Centipedes**
இனங்களின் மொத்த எண்ணிக்கை 23
தனித்துவமான இனங்களின் எண்ணிக்கை 03
தனித்துவமற்ற இனங்களின் எண்ணிக்கை 20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பல்வகைமைக் காலநிலை வலயங்கள்
### *Bioclimatic Zones*

இலங்கையில் நிலவும் உயிர்ப்பல்வகைமை மற்றும் காலநிலையின் அடிப்படையில், (1993 ஆம் ஆண்டு) ஆறு பல்வகைமைக் காலநிலை வலயங்கள் பிரகடனப்படுத்தப்பட்டன. பின்னர் 1999 ஆம் ஆண்டு வனவள மற்றும் சுற்றாடல் அமைச்சினால் இலங்கை 15 உயிர்ப்பல்வகைமைப் பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டது.




## மீன்கள் வாழும் வலயங்கள்
### *Ichthyological Zones*

இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் அமைந்துள்ள ஆறுகள் கொண்ட உலர் வலயம், மகாவலி வலயம், தென்மேல் வலயம், இடை வலயம் என இந்த வலயங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. பண்டைய காலத்திலிருந்து மக்களால் உருவாக்கப்பட்டுள்ள நீர்தேக்கங்களும் இந்த வலயங்களுக்கு உரியவையாகும்.




## பாலூட்டிகள் வசிக்கும் வலயங்கள்
### *Mammalian Zones*

இலங்கையின் காடுகள், மழைக்காடுகள் மற்றும் புதர்கள் கொண்ட பிரதேசங்களில் வசிக்கும் பாலூட்டிகளின் அடிப்படையில் இந்த வலயங்கள் பிரிக்கப்பட்டுள்ளன.




## பறவைகள் வாழும் வலயங்கள்
### *Avifaunal Zones*

இந்தியாவிலிருந்து வருகை தரும் பறவைகள் வாழும் வலயங்கள் உட்பட; உலர் வலயம், மலைநாட்டு வலயம், தாழ்நில வலயம், மத்திய நாட்டு வலயம் என பிரிக்கப்பட்டுள்ளன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'அட்டா' என்பது செவ்வாயில் இருந்து வந்த உயிரினமா?

சிலி நாட்டின் அட்டகாமா பாலைவனத்தின் எல்லையில் அமைந்துள்ள நகரமொன்றில் 2003 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின்போது, வழமைக்கு மாறான-மனித உடலை ஒத்த ஓர் உயிரினத்தின் புதைபடிமம் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த உடலின் நீளம் 152 மில்லி மீற்றர் ஆகும். மிகச் சிறிய இந்த உயிரினத்திற்கு 'அட்டா' (ATA) என பெயரிடப்பட்டுள்ளது. ஒஸ்கார் மூனோஸ் என்பவரே இந்த புதைபடிமத்தைக் கண்டுபிடித்தவராவார்.

## வேற்றுக்கிரகவாசியா? இல்லையா?

உடல் அவயவங்கள் குறித்த நிபுணரான விலியம் ஜங்கர்ஸ் என்பவர், 'அட்டா' வேற்றுக்கிரக உயிரினம் இல்லை என்றும், அது மரபணு விகாரத்திற்கு இலக்கான ஒரு குழந்தையின் உடலாகும் என்றும் தெரிவித்துள்ளார். இந்தக் குழந்தை பிறந்து சில மாதங்களில் இறந்திருக்கலாம் என அவர் மேலும் விளக்கமளித்துள்ளார். மருத்துவ ஆய்வாளரான ரெக்ஃப் லெக்மன் என்பவர், இந்த உடலானது ஒரு மனிதனின் உடல் ஆகும் என்றும், அவன் குள்ளமான உருவத்தைக் கொண்டவன் என்றும் தெரிவித்துள்ளார்.

## செவ்வாய் கிரக கற்பாறை

செவ்வாய் கிரகத்தின் மேற்பரப்பில் அங்குமிங்கும் பயணித்து ஆய்வுகளில் ஈடுபட்டுள்ள அமெரிக்காவின் நாஸா நிறுவனத்திற்குச் சொந்தமான ஸ்பிரிட் ரொபோ ஆய்வுக்கலமானது, அண்மையில் புவிக்கு அனுப்பிய புகைப்படங்களை ஆராய்ந்ததில், அவற்றில் ஒரு புகைப்படத்தில் காணப்படும் கற்பாறை ஒன்றில் சிறிய கதவு போன்ற அமைப்பு இருப்பதை காணக்கூடியதாக இருந்துள்ளது. இதனைக் கண்ணுற்ற பலர், 'அட்டா' என்பது ஒரு வேற்றுக்கிரக உயிரினமாக இருக்கலாம் என்றும், அது செவ்வாய் கிரகத்தில் இருந்து வந்திருக்கலாம் என்றும், ஸ்பிரிட் ஆய்வுக்கலம் எடுத்தனுப்பிய புகைப்படத்தில் காணப்படுவது அட்டாவின் வீடாகும் என்றும் கருதுகின்றனர்.

## வளம் நிறைந்த கிரகம்

எமது புவியில் முதலாவது உயிரினமாக பெக்டீரியாக்கள் உயிர்பெறும்போது, அபூர்வமும் அற்புதமும் நிறைந்த உயிரினங்களால் நிறைந்த கிரகமாக செவ்வாய் இருந்ததாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

மில்லியன் கணக்கான வருடங்களுக்கு முன்னர், பல சந்தர்ப்பங்களில் செவ்வாயில் நிகழ்ந்த மாபெரும் சுனாமி பேரலைகள் காரணமாகவும் ராட்சத கிரகங்களின் மோதல்களாலும் செவ்வாய் கிரகத்தின் வளிமண்டலம் மற்றும் சுற்றுச்சூழல் அனைத்தும் மாற்றமடைந்ததாக கூறப்படுகிறது. இதனால், அங்கு உயிர் வாழ்ந்ததாக அனுமானிக்கப்பட்ட அனைத்து உயிரினங்களும் இறந்ததாக விஞ்ஞானிகள் விளக்கமளிக்கின்றனர்.

(-அ)



விஞ்ஞானிகள் பலரை வியப்பில் ஆழ்த்திய புகைப்படம்





சிறிய வீடு போன்று காட்சியளிக்கும் கற்பாறை



குறித்த கற்பாறையில் காணக்கூடிய கதவு போன்ற அமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுமுறைக் காலத்தினை கவனமாகக் கழிப்போம்

*பாடசாலை விடுமுறைக் காலம் ஆரம்பமாகி விட்டது. இந்த காலப்பகுதியில் பிள்ளைகள் சுற்றுப்பயணங்கள் செல்வதிலும், வேடிக்கை வினோத நிகழ்ச்சிகளிலும், விளையாட்டுக்களிலும் ஈடுபடுவதில் ஆர்வம் காட்டுவர். வேடிக்கை வினோதத்துடன் பொழுதினைப் போக்குவது மகிழ்ச்சிக்குரியதே.எனினும் எப்பொழுதும் கவனமாக செயற்படவும் பழகிக் கொள்வது அவசியமாகும். இல்லாவிடின் விடுமுறைக் காலம் முழுவதும் உங்களால் இன்னல்களை அனுபவிக்க நேரிடும். விடுமுறைக் காலத்தினை கவனமாகவும் அதேநேரம் மகிழ்வுடனும் எப்படி கழிப்பது என்று பார்ப்போம்!*



## சுற்றுலாவின்போது முன்னெச்சரிக்கை

நாம் எப்பொழுதும் தூரப்பகுதிகளுக்கு சுற்றுலா செல்வதுண்டு. குறிப்பாக, மத வழிபாட்டுத் தலங்கள், விடுமுறை இல்லங்கள், கடற்கரைப் பகுதிகள் ஆகியவற்றுக்கும் பலர் சுற்றுலா செல்வதுண்டு. நமக்குப் அறிமுகமற்ற இந்த இடங்கள் தொடர்பில் நாம் கவனமாக இருக்க வேண்டும். இதன்போது முன் பின் அறியாத பலரை சந்திக்க நேரிடலாம். எனவே, முன்பின் அறிமுகம் இல்லாதவர்களுடன் பழகும் போது எப்பொழுதும் முன் எச்செரிக்கை உணர்வுடன் செயற்பட வேண்டும். அன்பாகப் பழகுவது போன்று பழகி பிள்ளைகளை ஏமாற்றுபவர்கள் தொடர்பில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

## தொலைந்து போக இடமுண்டு

முன்பின்அறியாத இடங்களுக்கு சுற்றுலா செல்லும் போது சனநெரிசல் காரணமாக, நீங்கள் தொலைந்துபோக நேரிடலாம். எனவே, அறியாத பாதைகளில் செல்வதனைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். பெற்றோரின் உதவியின்றி கடைகளுக்கு செல்ல முயலாதீர்கள். எப்பொழுதும் நன்கு அறிமுகமானவர்களுடன் பயணிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.



## பொருத்தமான உணவுகளை தெரிவு செய்யுங்கள்

சுற்றுலாவின்போது பலவிதமான உணவுகளை உட்கொள்வதற்கான வாய்ப்புக் கிட்டும். கண்ட கண்ட இடங்களில் எல்லாம் உணவுகளை வாங்கி உட்கொள்வதை தவிர்க்கவும். சுத்தமான உணவையே உண்ணுங்கள். இல்லாவிடின் வயிற்றுக் கோளாறு ஏற்பட்டு ஒவ்வாமைக்கும் ஆளாகலாம்.






## தொலைபேசி எண்களை நினைவில் கொள்ளுங்கள்

பெற்றோர்களினதும், நெருங்கிய உறவினர்களினதும் தொலைபேசி எண்களை நன்கு ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். அல்லது எழுதி வைத்துக் கொள்ளுங்கள். ஆபத்துக்களின் போது அது உதவியாக இருக்கும்.

## சாகசங்கள் கவனம்

விடுமுறைக் காலங்களில் சாகசங்கள் செய்வதற்காக மலைகள், குன்றுகள், கற்குகைகள் போன்ற பகுதிகளுக்கு செல்வதனை சிலர் விரும்புவார்கள். எனினும் இவ்வாறான இடங்களுக்கு செல்லும் போது பாதுகாப்பு குறித்து கவனம் செலுத்துவது அவசியமாகும். ஆபத்துக்கள், தடைகள் பற்றி நன்கு அறிந்தவர்களிடம் கேட்டறிந்து கொள்ளுங்கள்.

## நீர்நிலைகள் தொடர்பில் எச்சரிக்கை

நீர்வீழ்ச்சிகள், வாவிகள், ஆறுகள், கடல் போன்ற நீர் பகுதிகளுக்கு சென்றாலும் கவனம் தேவை. அதிக விபத்துக்கள் இவ்வாறான இடங்களிலில் தான் நிகழ்கின்றன. நீரின் ஆழம், வேகம் பற்றி அறியாமல் நீர் விளையாட்டுக்களில் ஈடுபடுவது, நீந்துவது, சேற்றில் நடமாடுவது என்பன காரண மாக, சிலரின் உயிருக்கும் ஆபத்து ஏற்படலாம்.




## காவுகொள்ளும் கடல் அலைகள்

பெற்றோர்களுக்கு தெரியாமல் கடலுக்குச் செல்வது ஆபத்தானது. கடலில் குளிக்கும் போது பெற்றோர்களின் உதவி அவசியமா கும். இரவில் கடற்கரைக்கு செல்வதும் தவிர்க்கப்படல் வேண்டும். மேலும் பந்து விளையாட்டுக்களில் ஈடுபடுவதும் ஆபத்தானது. பந்தின் மீதுள்ள அவதானத்தால் கடல்மீதுள்ள கவனிப்பு குறைந்து விடலாம். எனவே, இது ஆபத்தானதாகும்.



## பட்டம் விடுவது கவனம்

இது பட்டம் விடும் காலமாகும். பட்டம் விடுவது பலரின் பொழுது போக்காகும். எனினும் இதனால் ஆபத்துக்கள் உண்டு. கூரைகள் மற்றும் உயர்வான இடங்களில் இருந்து பட்டம் விடுவது தவிர்க்கப்படல் வேண்டும். பட்டத்தினைப் பார்த்துக் கொண்டு ஓடுவதனால் கற்கள் மீது விழுந்து காயங்கள் ஏற்படக் கூடும். இது குறித்தும் கவனமாக இருத்தல் வேண்டும்.

-பிரியதர்ஷினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ආයුබෝවන්
ஆயுபோவன்
**வணக்கம்**

**இன்றைய பாடத்தில் சமன்-வியாபாரி ஆகியோருக்கு இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.**

මුදලාලි: එන්න මහත්මයා.. මොනවද ඕනේ?
என்ன மஹத்மயா... மொனவத ஓனே?
வியாபாரி: **வாங்க ஐயா... என்ன வேண்டும்?**

සමන්: මට ෂර්ට් එකක් ගන්න ඕනේ.
மட்ட ஷேர்ட் எகக் கன்ன ஓனே.
சமன்: **எனக்கு ஷேர்ட் ஒன்று வாங்க வேண்டும்.**

මුදලාලි: මොන වගේ ෂර්ට් එකක් ද මහත්මයා? අත් දිග එකක් ද? අත් කොට එකක් ද?
மொன வகே ஷேர்ட் எகக் த மஹத்மயா? அத் திக எகக் த? அத் கொட்ட எகக் த?
வியாபாரி: **எந்த மாதிரி ஷேர்ட் ஐயா? நீளமான கையுடையதா? அரைக் கையுடையதா?**

සමන්: මට අත් දිග ෂර්ට් එකක් දෙන්න.
மட்ட அத் திக ஷேர்ட் எகக் தென்ன.
சமன்: **எனக்கு நீண்ட கையுடைய ஷேர்ட் ஒன்று தாருங்கள்.**

මුදලාලි: මොන පාට ද ඕනේ?
மொன பாட்ட த ஓனே?
வியாபாரி: **என்ன நிறம் வேண்டும்?**

සමන්: මට නිල් පාට ෂර්ට් එකක් දෙන්න.
மட்ட நில் பாட்ட ஷர்ட் எகக் தென்ன.
சமன்: **எனக்கு நீல நிற ஷேர்ட் ஒன்று தாருங்கள்.**

මුදලාලි: මේක හොඳ ද බලන්න මහත්මයා.
மேக ஹொந்த த பலன்ன மஹத்மயா.
வியாபாரி: **இது நல்லமா என்று பாருங்கள் ஐயா.**

සමන්: මේකේ මිල කීයද?
மேகே மில கீயத?
சமன்: **இதன் விலை என்ன?**

මුදලාලි: රුපියල් එක්දහස් පන්සීයයි මහත්මයා.
ருபியல் எக்தஹஸ் பன்சீயய் மஹத்மயா.
வியாபாரி: **ஆயிரத்து ஐநூறு ரூபா ஐயா.**

සමන්: මිල අඩු කරන්න බැරිද?
மில அடு கறன்ன பெரித?
சமன்: **விலை குறைக்க முடியாதா?**

මුදලාලි: මේවා අඩු කරන්න බැහැ මහත්මයා.
மேவா அடு கறன்ன பெஹெ மஹத்மயா.
வியாபாரி: **இவை குறைக்க முடியாது ஐயா.**

සමන්: හොඳයි.. මට මේ ෂර්ට් එක දෙන්න.
ஹொந்தய்... மட்ட மே ஷேர்ட் எக தென்ன.
சமன்: **நல்லது... எனக்கு இந்த ஷேர்ட்டை தாருங்கள்.**

**பயிற்சி**

**சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

1. **ஷேர்ட் வாங்க வேண்டும்.**
   ...............................................
2. **நீல நிற ஷேர்ட் தாருங்கள்.**
   ...............................................
3. **விலை குறைக்க முடியாதா?**
   ...............................................




## தன் கூற்று வாக்கியம் - பிறர் கூற்று வாக்கியம்
## Direct speech & Indirect speech

'உடன்பாடு' வாக்கியங்களை, 'தன் கூற்று' நிலையில் இருந்து, 'பிறர் கூற்று' நிலை வாக்கியங்களாக மாற்றியமைக்கும் முறை பற்றி மேலும் இங்கே அவதானிப்போம்.

அ) Father said, "I shall speak to the principal".
தந்தை கூறினார், "நான் அதிபருடன் கதைக்க வேண்டும்" என்று.
(தன் கூற்று வாக்கியம்-Direct speech)

ஆ) தான் அதிபருடன் கதைக்க வேண்டுமென தந்தை கூறினார்.
Father said that he would speak to the principal.
(பிறர் கூற்று வாக்கியம்-Indirect speech)

**குறிப்பு:** மேற்படி தன் கூற்று வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள 'shall' எனும் நிகழ்கால துணை வினைச்சொல், பிறர் கூற்று வாக்கியத்தில் 'would' என இறந்தகால வடிவத்துக்கு மாற்றம் பெற்றுள்ளதை கவனத்தில்கொள்ள வேண்டும்.

இ) Ravi said, "I shall pay the money without delay".
ரவி கூறினான், "நான் பணத்தைத் தாமதம் இன்றி செலுத்த வேண்டும்" என்று.
(தன் கூற்று வாக்கியம்-Direct speech)

ஈ) Ravi said that he would pay the money without delay.
தான் பணத்தைத் தாமதம் இன்றிச் செலுத்த வேண்டுமென ரவி கூறினான்.
(பிறர் கூற்று வாக்கியம்-Indirect speech)

உ) Radhi said, "I will go to the shop on poyaday".
ரதி கூறினாள், "நான் போயா தினத்தன்று கடைக்குப் போவேன்" என்று.
(தன் கூற்று வாக்கியம்-Direct speech)

ஊ) Radhi said that she would go to the shop on poyaday.
தான் போயா தினத்தன்று கடைக்குப் போவாள் என ரதி கூறினாள்.
(பிறர் கூற்று வாக்கியம்-Indirect speech)

**குறிப்பு:** மேற்படி தன் கூற்று (உ) வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள, 'will' எனும் துணை வினைச்சொல், பிறர் கூற்று வாக்கியத்தில் 'would' என இறந்தகால வடிவத்துக்கு மாற்றப்பட்டுள்ளதையும் அவதானிக்கலாம்.

**மேலும் ஒரு விளக்கம்:** தன் கூற்று வாக்கியத்தில் இடம்பெறுகின்ற 'shall' எனும் நிகழ்கால துணை வினைச்சொல் அல்லது 'will' எனும் நிகழ்கால துணை வினைச்சொல், பிறர் கூற்று வாக்கியத்தில் 'would' என இறந்தகால வடிவத்துக்கு மாற்றம் பெறுவதை, நாம் முக்கியமாக ஞாபகத்தில்கொள்ள வேண்டும்.

எ) Father said, "I can drive a car".
தந்தை கூறினார், "என்னால் கார் ஒன்றைச் செலுத்த முடியும்" என்று.
(தன் கூற்று வாக்கியம்-Direct speech)

ஏ) Father said that he could drive a car.
தன்னால் கார் ஒன்றைச் செலுத்த முடியுமெனத் தந்தை கூறினார்.
(பிறர் கூற்று வாக்கியம்-Indirect speech)

**குறிப்பு:** மேற்படி தன் கூற்று (எ) வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள 'can' எனும் நிகழ்கால துணை வினைச் சொல்பிறர் கூற்று வாக்கியத்தில் 'could' என இறந்தகால வடிவத்துக்கு மாற்றம் பெற்றுள்ளதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



தற்பொழுது நமது நாடு யானைக்கால் நோயை ஒழித்த நாடாக வெற்றி நடைபோடுகின்றது. உண்மையில் யானைக்கால் நோயானது, உடலின் பகுதிகளை விகாரமடையச் செய்யும் நோய்களில் முக்கிய இடத்தை வகிக்கின்றது. உலகில் 81 நாடுகளில் ஏறக்குறைய 120 மில்லியன் மக்களை பீடித்துள்ள நோயாகவும் இது உள்ளது. இற்றைக்கு 69 வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் யானைக்கால் நோய் கண்டுபிடிக்கப்பட்டது. அறுபத்தொன்பது வருடங்களுக்குள் யானைக் கால் நோயை இலங்கையில் ஒழித்தமையானது, மிகவும் முக்கியமான விடயமாகும். எனவே, இச்சாதனை குறித்தும் மீண்டும் யானைக்கால் நோய் பரவுவதைத் தடுக்கும் முறைகள் குறித்தும் ஆராய்வோம்.

# எமது நாட்டில் யானைக்கால் நோய் இனி பரவாது




### யானைக்கால் நோய் ஒழித்ததாக அறிவித்த தினம்

'யானைக்கால் நோயை ஒழித்த நாடு' என உலக சுகாதார தாபனத்தால் இலங்கையை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தினம் **2016** ஆம் ஆண்டு ஜூலை **21**ஆம் திகதியாகும். அன்று அத்தாபனத்தின் தென்கிழக்கு ஆசிய வலயத்தின் பணிப்பாளராகிய கலாநிதி பூனம் சத்திரபெல்சிங் அம்மையார் அவர்களால் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் யானைக்கால் நோய் ஒழிக்கப்பட்ட நாடாக இலங்கையை ஏற்று அதற்கான சான்றிதழை சுகாதாரத்துறை அமைச்சரிடம் கையளித்தார்.



### இலங்கையில் யானைக்கால் நோய் ஒழிக்கப்பட்டதை எவ்வாறு கணித்தனர்?

யானைக்கால் நோய் சம்பந்தமாக நூறு நோயாளிகளின் இரத்த மாதிரிகளை பரிசோதிக்கும்போது, ஒருவர் அல்லது அதற்கும் குறைவான தொகையாக இருந்தால் அந்நாடு யானைக்கால் 'நோய் ஒழிக்கப்பட்ட நாடு' என உலக சுகாதார ஸ்தாபனத்தால் பெயரிடப்படும்.

அதன்படி, இலங்கையில் யானைக்கால் நோய் குறித்து பரிசோதிக்கும் போது, நூற்றுக்கு **0.03** (**0.03**%) வீதமானோர் மாத்திரமே இருந்தனர். எனவே, 'இலங்கை யானைக்கால் நோய் ஒழிப்பு நாடு' என பிரகடனப்படுத்தப் பட்டது.

### யானைக்கால் நோய் காவி யார்?

யானைக்கால் நோயைப் பரப்புவது இருவகை நுளம்புகளாகும்.

- ★ கியுலெக்ஸ் க்வின்பெசியேட்டஸ் (Culex Quinquefas ciatus)
- ★ மென்சோனியா (Mansonia)

### யானைக்கால் நோயை ஏற்படுத்துபவர் யார்?

யானைக்கால் நோயை ஏற்படுத்தும் ஒட்டுண்ணிக் கிருமிகள் இருவகைப்படும். அவை

- ★ வுச்சரேரியா பேன்கரோஃபிட்டி (Wucheraria bancrofti)
- ★ ப்ருகியா மலாய் (brugia malayi)

### யானைக்கால் நோய் பரவும் விதம்

வளர்ச்சியடைந்த யானைக்கால் புழுக்கள் உடலின் எலும்பு மச்சைப் பகுதிகளிலேயே வாழ்கின்றன. அவற்றின் குட்டிகளான நுண்ணிய யானைக்கால் புழுக்கள் பகல் வேளையில் இரைப்பை போன்ற உள்ளக அவயங்களிலும் இரவு வேளைகளில் குருதிச் சுற்றோட்டத்தில் இணைந்து தோலுக்கருகில் இருக்கும். இந்த நுண்ணிய யானைக்கால் புழுக்கள் உள்ள இரத்தத்தை நுளம்புகள் உறிஞ்சிக் குடிக்கும்போது குருதியுடன் புழுக்களையும் உள்வாங்கப்படும். இந்த நுளம்பு இன்னொருவரைக் கடிக்கும் போது அந்நபரின் உடலினுள் யானைக்கால் நுண்புழுக்கள் செல்லும்.

### நோய் அறிகுறிகள்

- ★ தோலில் செந்நிற கட்டிகள் உருவாகுதல்
- ★ காய்ச்சல் மற்றும் உடலெங்கும் வலி ஏற்படுதல்
- ★ எலும்பு மச்சை வீங்குதல்

### யானைக்கால் நோயை ஒழிக்கும் முறை

இந்நோயை ஒழிக்கும் முகமாக 'யானைக்கால் நோய் ஒழிப்புத் திட்டம்' **1947** ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதன்மூலம் யானைக்கால் நோய் ஒழிக்கப்பட்டது.

### நோயாளிகளை இனங்கண்டு சிகிச்சை அளித்தல்

இரவு வேளைகளில் வீடுகளுக்கு சென்று வீட்டிலுள்ள அனைவரினதும் குருதி மாதிரிகளை பெற்று பரிசோதிப்பர். அவற்றில் யானைக் கால் நோயை ஏற்படுத்தும் ஒட்டுண்ணிகள் இருந்தால் சிகிச்சை அளிக்கப்படும்.

### கூட்டுச் சிகிச்சையால் யானைக்கால் நோய் ஒழிப்பு

உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிவுரைகளுக்கிணங்க கூட்டுச்சிகிச்சை முறைகள் ஆரம்பிக்கப்பட்டன. யானைக்கால் நோய் அபாயம் உள்ள பிரதேசங்களில் வாழும்யானைக்கால் நோய் உள்ள, இல்லாத அனைவருக்கும் யானைக்கால் நோய் ஒழிப்பு மாத்திரைகள் வழங்கப்படுவது முறையாகும். (-அ)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொழும்பு மாவட்ட சாரணர் கெம்போரி முகாம்



## ஓகஸ்ட் 10-14

விகாரமகாதேவி பூங்காவில் நடைபெறவுள்ள கொழும்பு மாவட்ட சாரணர் முகாமின் போது தற்கால பாவனை உபகரணங்கள் மத்தியில் 'ஆயுத இறாக்கையினை' நிர்மாணிப்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதன்படி கோடரி, கூரான கத்திகள், வாள்கள், மண்வெட்டிகள் என்பனவற்றை முகாமுக்கு எடுத்து வருவதனை தடை செய்ய வேண்டும் என்று கெம்போரி ஏற்பாட்டாளரும் உதவி பயிற்றுவிப்பாளர் பிரதானியுமான உப்புல் மானெல் ரணசிங்க உறுதியாக தெரிவித்துள்ளார்.




### முகாம் வாசல்

பூங்காவிற்குள் பிரவேசிக்கும் நெலும் பொக்குண மற்றும் கொழும்பு மாநகர சபைக்கு முன்னால் உள்ள பகுதியிலேயே முகாம்கள் நிறுவப்படும். சாரணர்கள் தமது முகாமின் வாசல் பகுதியினை பிரதான வீதிக்கு அருகாமையில் அமைத்தல் அவசியமாகும். பிரதான வீதியில் பயணிக்கும் மக்கள் இந்த முகாம்களை கண்டுகளிக்க வேண்டும் என்பதற்காக இவ்வாறான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன்படி, நீங்கள் நிர்மாணிக்கும் நடமாடும் முகாமின் அதிகபட்ச உயரம் **15** அடியாகவும் வாசல் கவர்ச்சிகரமானதாகவும், படைப்பாற்றல் மிக்கதாகவும் திட்டமிடுதல் வேண்டும்.




### புதிய அறிமுகப்படுத்தல்

ஓகஸ்ட் மாதம் **11** ஆம் திகதியன்று இரவுப் பொழுதில் முகாமில் உருவாகவுள்ள 'ஆரம்ப தீச்சுவாலை' அங்குரார்ப்பண நிகழ்வானது, சாரணர் வரலாற்றில் கண்டிராத முக்கிய நிகழ்வாக அமையவுள்ளது.

### தூதுவர்கள் சந்திப்பு

சாரணர் இயக்கத்தினால் மேற்கொள்ளப்படும் முகாம்களுக்கு வருகை தரும் தூதுவர்களுடனான சந்திப்புகளும் நிகழும். இதன்போது இலங்கையில் உள்ள அறிஞர்கள் மற்றும் அனைத்து நாட்டு தூதுவர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

### முகாமின் நோக்கமும் வெற்றி கொள்ளலும்

'உயிர்ப்பும் வாழ்க்கையும்' என்பதே முகாமின் தொனிப் பொருளாகும். இயற்கையைப் பாது காக்கும் கடமை மனிதர்களாகிய எங்களுக்கு உண்டு. இந்த செய்தியினை இந்த முகாமில் பிரதம அதிதிகளாகக் கலந்துகொள்ளும் கௌரவ ஜனாதிபதியுடனும் பிரதமர் அவர்களுடனும் இணைந்து சமூகத்திற்கு எடுத்துச் செல்வதே எமது நோக்கமாகும்.

## நடமாடும் ஊஞ்சலை நிர்மாணிப்போம்

நடமாடும் ஊஞ்சலுக்கான பலமான மூங்கில் மற்றும் தட்டையான பலகைத் துண்டினைப் பயன்படுத்தி சாரணர் முடிச்சுகளை கொண்டு நிர்மாணிக்க முடியும்.

கவனிக்க: மூங்கிலை சமமான மூன்று துண்டுகளாக வெட்டி மூன்று ஊஞ்சல்களை அமைக்கவும். ஊஞ்சல் மத்தியில் தலா இரண்டு சாரணர்கள் வீதம் நின்று கொண்டு மூங்கிலைப் படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு பலமாகப் பிடித்துக்கொள்ளுங்கள். ஊஞ்சலின் பலகையினை சரியாக வைத்துக்கொள்வதற்கு இங்கு காட்டப்பட்டுள்ள சாரணர் முடிச்சினை மட்டும் பயன்படுத்துங்கள்.




## முகாம் வாகனக் கண்காட்சி

வெளிநாட்டு சாரணர்கள் குழுக்களாக இணைந்து சாரணர் முகாமில் இந்த வாகனத்தை உருவாக்கியுள்ளார்கள். இந்த வாகனமானது, பழைய வாகனங்களிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட உதிரிப்பாகங்களைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு, இந்த வாகனத்தின் வேகமானது, மணித்தியாலத்திற்கு ஒரு கிலோமீற்றராகும்.



## தகரப் பீப்பாயில் சமைப்போம்


சாரணர் முகாம்களில் சாரணர் நுட்பங்களைக் கையாண்டு உணவினைத் தயாரிப்பதனை ஊக்கப்படுத்துவதற்கு சாரணர் பேராசிரியர்கள் முன்வர வேண்டும். இங்கு அதற்கான ஓர் உதாரணத்தினைப் பார்ப்போம்.

பாவனைக்கு உதவாது என்று கருதப்பட்ட தகர பீப்பாயினை படத்தில் காட்டியவாறு குறுக்காக வைத்து அதன் அடியில் நெருப்பினை மூட்டிக்கொள்ளவும். தீப்பொறிகள் முகாமில் தெறிக்காதவாறு அடுப்பினை பயன்படுத் துவது குறித்து சாரணர்கள் கவனம் செலுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி: 200



### மேலிருந்து கீழ்

01. நற்செயல்களுக்காகக் கிடைப்பது.
02. துணி வகைகளில் ஒன்று.
03. சிறுபிள்ளைகளுக்கு இதைக் கேட்பதில் விருப்பம். (தலைகீழ்)
04. 'அசல்' - எதிர்ப்பதம். (தலைகீழ்)
05. எண்ணெய்.
06. 'பூரண உணவு' எனக் கூறப்படுவது. (தலைகீழ்)
07. நீர். (குழம்பியுள்ளது)


### இடமிருந்து வலம்

01. நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருப்பது.
03. விழி. (மாறியுள்ளது)
04. நீரிலும் நிலத்திலும் வாழும் இயல்புடைய சிறிய உயிரினம்.
05. மங்கை. (குழம்பியுள்ளது)
06. ஆற்றைக் கடக்க அமைக்கப்பட்டிருக்கும். (மாறியுள்ளது)
08. அழிவு. (மாறியுள்ளது)


### குறுக்கெழுத்துப் போட்டி: 199 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 உ | ல | கு | | வு | 2 சா |
| தி | | | | 3 தீ | மை |
| ர | ம் | 4 த | | த் | |
| ம் | 5 க | ள | | லை | 6 பா |
| | வி | 7 ப | ல | ல் | |
| ம் | ட | 8 தி | | 9 மு | னை |

## எண்ணிக்கைக்குப் பொருத்தமான படத்தொகுதியுடன் இணைக்க




## A படத்தை அவதானித்து B படத்திலுள்ள வித்தியாசங்களில் X அடையாளமிடுக







## குழம்பியுள்ள எழுத்துக்களை ஒழுங்கமைத்து சரியான சொல்லை எழுதுக


u s n


p l a m


r b a c


b d e



p e r s i d


## விமானத்தில் விடுபட்டுள்ள பகுதிகளை தெரிவுசெய்து வெட்டி ஒட்டுக





## அறிவுக்கு விருந்து (27.07.2016) விடைகள்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருகோணமலை, கிண்ணியா, ஈச்சந்தீவைச் சேர்ந்த சிவசங்கர்-பிரியதர்ஷினி தம்பதியரின் செல்வப் புதல்வி அமிழ்தினி, தனது ஆறாவது பிறந்தநாளை (04.08.2016) அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருளால் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.

விஜய் விழா உலா
த.பெ. எண் 2037
கொழும்பு

திருகோணமலை, கிண்ணியா, ஈச்சந்தீவைச் சேர்ந்த சிவசங்கர்-பிரியதர்ஷினி தம்பதியரின் செல்வப் புதல்வி சிந்தனா, தனது முதலாவது பிறந்தநாளை (05.08.2016) அன்று விமர்சையாக கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருளால் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.



## கைவண்ணங்கள்



அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
'விஜய்'
த.பெ.எண் 2037
கொழும்பு



எஃப்.றிஸ்லா பானு,
அரபா மு.ம.வித்., கண்டி.



மூசின் பாத்திமா நுஸ்ரிகா,
அராபா மு.ம.வித்., மாதிபொளை.



ரா.நிரோஷன்,
மீனாச்சியம்மாள் பாட., காவத்தை.



பா.ரக்ஷிதா,
நு/கேட்லொஜ் த.வித்., கந்தப்பளை.



எஃப்.சப்னா புஹாரி,
க/எனசல் கொல்ல மத்திய கல்.,
தெல்தோட்டை.



எம்.ரிஸாட்,
மட்/மம/அந்-நாஸர் வித்., காத்தான்குடி-01.



பா.சேதுஸ்கர்,
இ/புனித/ஜோக்கிம் த.ம.வித்.,
இரத்தினபுரி.



விதுர்ஷினி,
ஸ்ரீ/சண்முகானந்தா வித்.,
ஹாலி-எல.

# கரிசனையும் தொடர்பாடலும்



சாதாரணமாக, ஒரு விடயத்தை அல்லது கருத்தை அதிகாரத்தின்மூலம் அல்லது நிர்ப்பந்தத்தின் மூலம் மனித மனங்களில் விதைத்துவிட முடிவதில்லை. அன்பான காருன்யமான நடத்தைகள் மற்றும் பண்பான சொற்பிரயோகங்களின்மூலமே தனி நபர் மனங்களில் கருத்துக்களை மிக இலகுவாக விதைத்துவிட முடியும். அந்தவகையில், பிள்ளை ஒன்று விருப்பத்துடனும் ஆர்வத்துடனும் பாடசாலைக்கு செல்கின்றதாயின் அல்லது பாடசாலை சூழலை மிகவும் விரும்புகின்றதாயின் அதற்கு ஆசிரியரின் அன்பான, நடத்தைகளும் ஒரு காரணமாகலாம். இது கற்றல் தொடர்பான திறமைகளின் வெளிப்பாடுகளுக்கும் ஒரு காரணமாக அமைகின்றது.

ஆகவே, கருத்துக்கள் உள்வாங்கல்கள் மற்றும் கருத்துப்பரிமாற்றங்கள் தொடர்பில் அன்பான மற்றும் பண்பு நிறைந்த பிறர் மனத்தைப் புண்படுத்தாத வார்த்தைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன எனலாம். இதேவேளை, அதிகாரமாகக் கூறப்படும் கருத்துக்கள் கேட்போர் மனத்தில் ஒருவித வெறுப்பை ஏற்படுத்திவிடுகின்றது. இது உறவுச் சிக்கல்கள் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளல் மற்றும் உள்வாங்கல்களிலும் பிரச்சினைகளை ஏற்படுத்திவிடுகின்றது. ஏனெனில், ஒவ்வொரு தனிநபரும் சுய கவுரவத்துடனும் மரியாதையுடனும் நடத்தப்படுவதையே விரும்புகின்றனர்.

அத்துடன், கூறப்படும் கருத்துக்கள் தொடர்பில் வார்த்தைப் பிரயோகங்கள் மிக நாகரிகமாகவும் தமது சுய கவுரவத்தைப் பாதிக்காத வகையிலும் அமைய வேண்டும் என கருதுகின்றனர். இத்தகைய செயற்பாடுகள் முதன்மைபெறும்போதே, எமது உரையாடல்கள்மூலம் வெளிப்படுத்தப்படும் கருத்துக்கள் அக்கறையுடனும் மரியாதையுடனும் பிறரால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

# 'நீல் ஆம்ஸ்ட்ரோங்' எழுதிய கடிதம் தேசிய நூலகத்தில்

அரச விருது பெற்றவரும் பிரபல வானியல்துறை எழுத்தாளருமான அநுர சீ.பெரேரா அவர்களினால் சந்திரனுக்கான மனிதனின் முதல் பயணத்தைக் குறிக்கும் விதமாக எழுதப்பட்ட நூலின் மூன்று பிரதிகள் சந்திரனில் கால்தடம் பதித்த மூன்று விண்வெளி வீரர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இந்த நூலினை பெற்றுக்கொண்ட நீல் ஆம்ஸ்ட்ரோங் தமது நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவிக்கு முகமாக எழுத்தாளருக்கு 'நாஸா' ஆய்வு நிலையத்தினூடாக கடிதமொன்றை அனுப்பியிருந்தார். மேற்படி வரலாற்று முக்கியத்துவமிக்க இந்த கடிதத்தின் பிரதியொன்றை கொழும்பு தேசிய நூலகத்தில் பார்வைக்கு வைக்கும் பொருட்டு தேசிய நூலகத்தின் நூலகப் பொறுப்பாளர் வருணி கங்கபட ஆரச்சியிடம் நூலின் எழுத்தாளர் அநுர சீ பெரேரா வழங்கியதை படத்தில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பானுக்குப் போட்டியாக சீனாவின் ரொபோ அழகி







சீனாவின் பிரதான வணிக நகரான டியென்ஜியின் 'டாவோச்' மாநாட்டில் இடம்பெற்ற தொழில்நுட்பக் கண்காட்சியில் உண்மையான உருவ அமைப்பினைக் கொண்ட ரொபோ ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளனர். இது சீனாவின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப வியலாளரான ஷியொபிங்கின் கைவண்ண மாகும். இதற்கு 'ஜியா ஜியா' என பெயர் சூட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

"ஜப்பானுக்குப் போட்டியாக சீனா உருவாக்கியுள்ள இந்த ரொபோ, பெண் போல கண்களால் அனைத்தையும் அவதானித்து, இணையத்தின் ஊடாக செயற்படக்கூடியது."

ஜப்பானுக்குப் போட்டியாக சீனா உருவாக்கியுள்ள இந்த ரொபோ உலகின் கவனத்தினை ஈர்த்துள்ளது.

ஜியா ஜியா ரொபோ அழகியினை உருவாக்குவதற்கு சென் ஷியொங்ஜி உட்பட குழுவினருக்கு மூன்று ஆண்டுகள் தேவைப்பட்டுள்ளது. ஜியா ஜியாவினால் பேசவும் கண்களை இமைக்கவும் முகத்தில் உணர்ச்சிகளை வெளிப்படுத்தவும் அத்தோடு, கண்களால் அனைத்தையும் கவனித்துக்கொள்ளவும் முடியும். ஆனால், ஜியா ஜியாவினால் நடக்கவோ, கழுத்தினை அசைக்கவோ மட்டும் முடியாது. இந்த அழகியின் மூளை இணையத் தொடர்புகளைப் பேணும் ஒரு கணிணியாகும்.





தற்போது இந்த அழகியை மெருகூட்ட நடவடிக்கை எடுத்து வருவதாக ஷியொங்ஜி தலைமையிலான குழு தெரிவித்துள்ளது. மேலும் எதிர்காலத்தில் இந்த அழகி உண்மையான பெண் போன்று நடக்கவும், உடலை அசைக்கவும் ஆற்றல் பெறுவார் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். (இ)

## வெல்லுங்கள்! விஜய் – தூவானம் வழங்கும் வாரம் 3 பரிசில்கள்!

★ Practical English Learning Software DVD



★ 4000 English Letter Writing Software



★ 8 GB Pen Drive



புதன்தோறும் வெளிவரும் 'விஜய்' பத்திரிகைகளை நன்கு வாசித்து அதனை தொடர்ந்து வரும் ஒவ்வொரு புதன்கிழமையிலும் 'Thoovaanam' SMS ஊடாக கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்கத் தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

★ 'Thoovaanam' SMS ஊடாக, கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் மாத்திரமே நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாராந்தம்...

★ ஆங்கிலம் கற்கும் மென்பொருள் DVD

★ 4000 ஆங்கில மாதிரிக் கடிதங்கள் அடங்கிய மென்பொருள்

★ 8GB பென் டிரைவ் போன்றன இலவசமாக வழங்கப்படும்.

27.07.2016 'தூவானம்' கேள்விக்கான விடை: பூஜித ஜயசுந்தர

Pendrive வெற்றியாளர்: எஃப்.இல்மா, 133/90, கொடமுதுனை, நாவலப்பிட்டி.

'Thoovaanam' SMS செயற்படுத்தும் முறை

Write Message

F Thoovaanam என Type செய்து 40404 எனும் இலக்கத்திற்கு SMS செய்யவும்

அனுப்ப வேண்டிய முகவரி:

Pen Drive போட்டி (10.08.2016) விஜய் த.பெ.இல 2037 கொழும்பு

இவ்வார கூப்பன்: 10.08.2016

விடை: ..............................

பெயர்: ..............................

முகவரி: ..............................

தொ.பே.இல: ..............................

பாடசாலை: ..............................

தரம்: ..............................

..............................

கையொப்பம்

noolaham.org | aavanaham.org



பாலைவனங்கள் ஊடாக பயணிப்பவர்கள் திடீரென மணல் சுழியினுள் இழுபடுவதனை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இதிலிருந்து தப்பித்து வெளிவருவது முடியாத காரியமாகும். இதனை மரணச் சுழி என்று அழைக்கின்றனர். இன்று நாம் செய்யவுள்ள விஞ்ஞான விந்தையின் போது, இவ்வாறான மணல் சுழியினையே உருவாக்கப்போகின்றோம். ஆயினும் அதற்காக நாம் மணலைப் பயன்படுத்தப் போவதில்லை.

மரணச் சுழி என்பது உருவாகக் கூடிய ஏற்புடைய இடங்களில் உருவாகி விடுகின்றது. ஆனால் இது சாதாரண மணலாகும். எனினும் இவை நீருடன் நன்கு கலந்திருப்பதனால் மணல் துகள்கள் கட்டிகள் ஒன்றுடன் ஒன்று உரசப்படுவதில்லை.




விஞ்ஞான விந்தைகள்

# மணல் சுழியினை உருவாக்குவோம்

**இதற்குத் தேவைப்படுபவை:**

★ கோன்பிளார் ஒரு கோப்பை (சோள மா)
★ நீர் கோப்பை அரைவாசி
★ பிளாஸ்டிக் பாத்திரம்
★ கரண்டி




## இவ்வாறு செய்வோம்

கோன்பிளாரில் நீரினை இட்டுக் கலக்க வேண்டும். கோன்பிளாரினால் உருவாக்கப்படும் சுழியினை கரண்டியினைப் பயன்படுத்திக் கிண்டுவதன்மூலம் உருவாக்கமுடியும். அதனை மெதுவாகக் கிண்டும் போது அது பதார்த்தம் போன்று தோன்றும். ஆனால் வேகமாகக் கிண்டும் போது ஒரு நிமிடத்தில் கோன்பிளார் கலவையானது இறுகிவிடும்.

## நடைபெறும் செயல்

கோர்ன்பிளாரிக்கு நீரை அளவாகக் கலக்கும்போது, வேகமாக கரண்டியால் கிண்டினால் கலவை விரைவாக இறுகி விடுகின்றது. இதன்போது, நீரை இட்டவுடன் கோன்பிளாரில் உள்ள துணிக்கைகள் ஒன்றோடு ஒன்று இணைந்து விடுகின்றது.



ஆனால் மெதுவாகக் கிண்டினால் மா துணிக்கைகள் ஒன்றையொன்று நழுவிச் செல்ல முடியும்.

உண்மையான மரண சுழியும் இவ்வாறே செயற்படுகின்றது. இது பார்வைக்கு இறுகிப் போயுள்ளதாக தோன்றும். ஆனால் ஏதாவது ஓர் அழுத்தத்தினை மெதுவாக பிரயோகித்தவுடன், பதார்த்தமாக மாறி விடுகின்றது. எதிர்பாராமல் மரணச் சுழியில் அகப்பட்டால் உடலை மெதுவாக சுற்றுவதன் மூலம் பாதங்களை அசைத்து அதிலிருந்து சில வேளைகளில் வெளிவர முடியும்.

(இ)

# புருணை

'போர்ணியோ' எனும் மக்கள் இங்கு முதல் குடிகளாவார்.



*மலேசியாவையும் தென் சீனக் கடலையும் எல்லையாகக் கொண்ட புருணை தென் கிழக்காசிய வலய நாடாகும். இங்கு கி.பி 1368 இல் சுல்தான்கள் எனப்படும் முஸ்லிம் ஆட்சியாளர்கள் ஆட்சியை நிலைநாட்டினர். அதன்பின்னர் 1888 இல் பிரித்தானியரின் ஆட்சிக்குட்பட்டதோடு, 1984 ஆம் ஆண்டு அவர்களிடமிருந்து சுதந்திரம் அடைந்தமை குறிப்பிடத்தக்கது.*



இந்நாட்டின் முதலாவது சுல்தானாக சுவாங் அலக் என்பவரால் இந்நாடு தாபிக்கப்பட்டது.




தற்போதைய சுல்தான் 'ஹஸ்ஸன்னல் பொல்கியா' ஆவார்.

### தேசிய மிருகம், பறவை, மலர்

தேசிய மிருகம் - புலி
தேசிய பறவை - வெள்ளை நிறப் பருந்து
தேசிய மலர் - சிம்போக் மலர்

### இனங்கள்




**மொழி** மலே (உத்தியோக பூர்வ மொழி)
ஆங்கிலம், சீனம்

**சமயம்** முஸ்லிம் 78.8%, கிறிஸ்தவம் 8.7%, பௌத்தம் 7.8%, ஏனையவை 4.7%

### அரசியல்

புருணை நாடாளுமன்றம்

இங்கு அரசியல் கட்சிகளை அறிமுகப்படுத்த முற்பட்டபோதும், அது வெற்றி அளிக்கவில்லை.



### இயற்கை வளம்

இயற்கை வாயு, பெற்றோலியம்

### தலைநகரமும் பெரிய நகரமும்



மொத்த நிலப்பரப்பு ச.கி.மீற்றர்
**5,265 km²**

மொத்த சனத்தொகை
**429,646**



நாணயம் - புருணை டொலர்

பாரம்பரிய உடை ஒன்று

இங்கு 75% இற்கும் அதிகம் காடுகளாகும்.

கி.பி. 1888 இல் பிரித்தானியரின் குடியேற்ற நாடாகியது.

விவசாயமே இங்கு முக்கிய வாழ்வாதாரம்.

காய்கறிகள், பழங்கள், தானியங்கள் இங்கு பயிரிடப்படுகின்றன.

பாரம்பரிய நடனம்

உணவு தேவைக்காக கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன.




ஆடைக் கைத்தொழில் நடைபெறுகிறது.



இங்குள்ள கடற்கரையில் எண்ணெய் வளம் உள்ளது.

அழகிய இல்லங்கள் உள்ளிட்ட பல கட்டடங்கள் உள்ளன.

குடிநீர் போத்தல் தயாரிப்பு முக்கிய வர்த்தகமாகும்.

மீன்பிடிக் கைத்தொழில் முக்கிய வருவாய்த்துறை.

'ஷரியா சட்டம்' நடைமுறையில் உள்ளது.

இஸ்லாமிய பள்ளிவாசல்.



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## இலங்கையின் தமிழ் சான்றோர்கள்

# கார்த்திகேசு சிவத்தம்பி



உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளராக பணியாற்றியவர்தான் கார்த்திகேசு சிவத்தம்பி ஆவார். இவர் **1932** ஆம் ஆண்டு வைகாசி மாதம் **10** ஆம் திகதி யாழ்ப்பாணம் கரவெட்டியைச் சேர்ந்த கார்த்திகேசு-வள்ளியம்மை ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். தற்காலத்தில் வாழ்ந்த முக்கிய தமிழ் இலக்கிய விமர்சகர், திறனாய்வாளர் மற்றும் சமூக சிந்தனையாளர்களுள் இவரும் முக்கியமானவராவார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியிலும் கொழும்பு சாகிரா கல்லூரியிலும் கற்றார். மேலும் இலங்கை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளமாணிப் பட்டத்தையும், முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். ஐக்கிய இராச்சியத்திலுள்ள பர்மிங்காம் பல்கலைக்கழகத்தில் ஆய்வுப் படிப்பை மேற்கொண்டு முனைவர் (Ph.D) பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

கொழும்பு சாகிரா கல்லூரியில் ஆசிரியராகவும், இலங்கை நாடாளுமன்ற சமகால மொழிபெயர்ப்பாளராகவும் இவர் பணிபுரிந்துள்ளார். கொழும்பு, கிழக்குப் பல்கலைக்கழகங்களிலும் விரிவுரையாளராகவும், உதவி விரிவுரையாளராகவும், இணைப் பேராசிரியராகவும் பணியாற்றினார். இவருடைய நூல்களாக வெளிவந்தவைகளாவன: இலங்கைத் தமிழர் யார், எவர்? யாழ்ப்பாணத்தின் புலமைத்துவ மரபு, தமிழில் இலக்கிய வரலாறு ஆகிய நூல்களை வெளியிட்டார். ஆய்வுக் கட்டுரைகள் எழுதுவதில் மட்டுமன்றி சிவத்தம்பி நடிப்பாற்றல் மிக்கவர். பல்கலைக்கழக காலத்தில் மேடை நாடகங்களில் நடித்ததோடு, பின்னர் வானொலி நாடகங்களிலும் நடித்து புகழ் பெற்றவர். இவ்வாறு தன்னால் இயன்ற அனைத்து வழிகளிலும் தமிழை வளர்த்துவிட்ட பேராசிரியர் காத்திகேசு சிவத்தம்பி அவர்கள் தனது **79** ஆவது வயதில் **2011**, ஆடி **6** ஆம் திகதியன்று இவ்வுலகை விட்டு மீளாத்துயில் கொண்டார்.

# தெரிந்து கொள்வோம்

★ 'சகுனி' என்ற கதாபாத்திரம் இடம்பெற்ற காவியம் எது?

மகாபாரதம்



★ வட அமெரிக்கா கண்டத்தில் மிகப் பெரிய நாடு எது?



கனடா

★ 'டிரோன்' விமானங்கள் என்றால் என்ன?

ஆளில்லாத தானியங்கி விமானங்களே டிரோன் என அழைக்கப்படுகின்றது





★ G.S.M என்பதன் விரிவாக்கம் என்ன?

Global System for Mobile

★ ஒரு சதுர அடி எத்தனை சதுர சென்டிமீற்றர்?

929.03 செ.மீற்றர்

★ 'அர்த்தமுள்ள இந்து மதம்', 'இயேசு காவியம்' என்ற நூல்களின் நூலாசிரியர் யார்?

கவிஞர் கண்ணதாசன்



★ இந்தியாவின் தேசிய மலர், தேசிய விலங்கு, தேசிய பறவை, தேசிய மரம் என்பன எவை?



மலர் - தாமரை
பறவை - மயில்
மரம் - ஆல மரம்
விலங்கு - புலி

தொகுப்பு: உடுவை பரந்தாமன்

## உலகில் பிரபல்யமானவர்கள்

# சேர் ஜேம்ஸ் சாட்விக்



நியூத்திரனை கண்டுபிடித்தமைக்காக **1935** ஆம் ஆண்டுக்குரிய இயற்பியலாளருக்கான நோபல் பரிசைப் பெற்றவர் இவர். **1891** ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் **20** ஆம் திகதி அன்று இங்கிலாந்தில் ஜோன் ஜோசப் சாட்விக், ஆன் மேரி நௌல்ஸ் சாட்விக் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். சாட்விக் மான்செஸ்டர் பல்கலைக்கழகத்திலும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திலும் கல்வி கற்றார். சாட்விக் முதலாம் உலகப் போரின்போது ஜெர்மனியினுள் ருல்பென் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டதுடன், அங்கு அவருக்கென ஆய்வுகூடமொன்றை அமைக்க ஜேர்மனி அனுமதியளித்தது. இதன்போது, அங்கு சாட்விக்கும் டி.எல். லிசின் என்பவரும் இணைந்து பொசுபரசின் அயனாக்கம் பற்றியும், காபனீரொட்சைட்டினது, குளோரினினதும் ஒளி இரசாயனத் தாக்கம் பற்றியும் ஆய்வுகளை மேற்கொண்டமை குறிப்பிடத் தக்கது.

இரண்டாம் உலகப்போரின் போது, ஐக்கிய அமெரிக்காவில் நடாத்தப்பட்ட மேன்ஹாட்டன் திட்டத்தில் பங்கு பற்றிய ஒரு முன்னணி பிரித்தானிய விஞ்ஞானியாக தெரிவு செய்யப்பட்டார். இவரது இயற்பியலில் அடைவுகளுக்காக **1945** இல் இவருக்கு 'நைட்' பட்டம் வழங்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

**1932** இல் சாட்விக், அணுக்கருவில் அறியப்பட்டிராத துணிக்கையொன்றைக் கண்டுபிடித்தார். சாட்விக் மிகக் குறுகிய காலத்தில் ஐக்கிய அமெரிக்காவின் மேன்ஹாட்டன் திட்டத்தில் இணைந்து கொண்டார். இத்திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட இரு அணு குண்டுகள் ஜப்பான் மீது போடப்பட்டன. இதனால், ஒகஸ்ட் **1945** இன் நடுப்பகுதியில் இரண்டாம் உலக மகா யுத்தம் நிறைவடைந்தது. உலகில் உள்ள அனைவருரையும் வியக்கவைத்த ஜேம்ஸ் சாட்விக் **1974** ஆம் ஆண்டு ஜூலை மாதம் **24** ஆம் திகதியன்று இவ்வுலகைவிட்டு நீங்கினார்.

தொகுப்பு: ஜுனைட் எம்.பஹ்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டைனோசரஸில் உருவான பறவை

65 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் 'டைனோசரஸ்' போன்ற ஊர்வன இனத்திலிருந்தே பறவைகள் தோன்றியதாக ஆராய்ச்சியா வர்கள் கருதுகின்றனர். அதன்படி, முதலில் தோன்றிய பறவை ஆர்க்யாப் டெரிக்ஸ் (Archaeopteryx) எனப்படும் பறவையே என்றும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.



இதிலுள்ள சிறப்பம்சம் என்னவென்றால், அவ்வாறு ஆரம்ப கட்டத்தில் உருவான அந்த பறவைகளுக்கு சொண்டு (அலகு) காணப்படவில்லை என்பதாகும். இது தொடர்பான ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

# 'குளோனிங்' முறையில் மரங்கள் உருவாக்கல்

உலகளாவிய அளவில் இன்று கடும் வறட்சி நிலவி வருகின்றது. இதனை தவிர்ப்பதற்கு மரங்களை பாதுகாப்பது மட்டுமன்றி, போதியளவில் மரங்களை விளைவிக்க வேண்டிய தேவையும் மனிதனுக்கு ஏற்பட்டுள்ளது. இதன் ஓர் அங்கமாகத் தான் மரங்களிலுள்ள மரபணு மாதிரிகளைச் சேகரித்து குளோனிங் முறையில் அவற்றை உருவாக்கி காடுகளில் நடும் முயற்சியில் அமெரிக்காவின் 'Archangel Ancient Tree Archive' எனும் தொண்டு நிறுவனமொன்று இறங்கியுள்ளது. குறிப்பாக, அளவில் பிரமாண்டமான மரங்களை வளர்ப்பதனால் இரட்டிப்பு பயனை அடைய முடியும் என்பதனால், அத்தகைய மரங்களையே குளோனிங் முறையில் உருவாக்குவதற்கான பரிசோதனைகள் நடந்து வருகின்றது.



# சூரியக் குடும்பம்...?



இங்குள்ள படத்தை உற்றுப்பாருங்கள். விண்வெளியில் அமைந்துள்ள சூரியக் குடும்பம் போல் உள்ளதல்லவா? உண்மையில் இது சூரியக் குடும்பம் அல்ல... ஜேர்மனியின் 'உட்டிங்' எனும் பகுதியில் ஓர் ஏரிக்கரைப் பகுதியில் புல்வெளி, மக்காச் சோளம், சூரிய காந்தி வயல்கள் ஆகியவற்றை வெட்டித் திருத்தி சூரியக் குடும்பத்தின் வடிவத்தை ஒத்த வகையில் செதுக்கிச் செய்துள்ள காட்சியே இது.

# பறக்கும் நரி



பறக்கும் நரியை கண்டுள்ளீர்களா? பறக்கும் நரி என்பது ஒருவகை வௌவால்தான். அப்படியானால், இதற்கு எப்படி 'பறக்கும் நரி' என்று பெயர் வந்தது என்று கேட்கிறீர்களா? அதாவது, இதன் முக வடிவம் நரியைப் போன்றே இருக்கும். அது மட்டுமன்றி, இதன் உடம்பிலும் நரியின் ரோமத்தைப் போன்றே பழுப்பு நிறத்தில் உரோமம் உள்ளது. இதன் காரணமாகவே இதனை 'பறக்கும் நரி' என்கிறார்கள்.

# கணித விநோதம்

1 x 1 = 1
11 x 11 = 121
111 x 111 = 12321
1111 x 1111 = 1234321
11111 x 11111 = 123454321
111111 x 111111 = 12345654321
1111111 x 1111111 = 1234567654321
11111111 x 11111111 =
123456787654321
111111111 x 111111111 =
12345678987654321

1 x 8 + 1 = 9
12 x 8 + 2 = 98
123 x 8 + 3 = 987
1234 x 8 + 4 = 9876
12345 x 8 + 5 = 987 65
123456 x 8 + 6 = 987654
1234567 x 8 + 7 = 9876543
12345678 x 8 + 8 = 98765432
123456789 x 8 + 9 = 987654321

9 x 9 + 7 = 88
98 x 9 + 6 = 888
987 x 9 + 5 = 8888
9876 x 9 + 4 = 88888
98765 x 9 + 3 = 888888
987654 x 9 + 2 = 8888888
9876543 x 9 + 1 = 88888888
98765432 x 9 + 0 = 888888888

# வலம் வரும் வலைத்தளம்




flavors.me எனும் இந்த வலைத்தளத்தினூடே பெறக் கூடிய 'டெம்ப்பிளேட்'களில் பொருத்தமான டெம்ப்பிளேட் களை தெரிவுசெய்து குறித்த வலைத் தளத்திலேயே வழங் கப்படுகின்ற 'டூல்ஸ்' ஊடாக இலகுவாகவும் விரைவாகவும் புதிய வலைத்தளங்களை உரு வாக்கிக்கொள்ள முடியும்.




hushmail.com என்பது வர்த்தக விளம்பரங்கள் இல்லாத ஈமெயில் எக்கவுன்ட் களை அமைத்துக்கொள்ளக் கூடிய ஒருவலைத் தளமாகும். விளம்பரங்கள் உள்ளடக்கப் படாத இந்த ஈமெயில் சேவை ஊடாக அனுப்பப்படும் ஒவ்வொரு ஈ மெயிலும் 'என்க்ரிப்ட்' ஆகும். அவ்வாறே விரைவான சேவையாகவும் அமையும்.




வலைத்தளங்களை PDF ஆக 'சேவ்' செய்து தரும் வலைத்தளமே Pdfmyurl.com எனப்படும் வலைத் தளமாகும். ஏதேனும் ஒரு வலைத் தளத்திலுள்ள சகல பக்கங்களையும் 'பீடீஎஃப்(PDF) ஃபைல் ஆக 'சேவ்' செய்து கொள்வதற்கு இந்த வலைத் தளத்தைப் பயன்படுத்த முடியும்.இதற்கு என்ன செய்ய வேண்டுமாயின் தேவையான வலைத்தளத்தின் URL ஐ copy செய்து அதனை Pdfmyurl.com வலைத்தளத்திலுள்ள 'பொக்ஸ்' இல் 'பேஸ்ட்' செய்வதன்மூலம் இதன் பயனைப் பெறமுடியும்.

இப்பத்திரிகை கொழும்பு -2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2016, ஒகஸ்ட் 10 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday August 10, 2016.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org